Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 096 | செவ்வாய்க்கிழமை | மாசி 18 ஆம் நாள் 02 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# படைகளைப் பாதுகாக்க விரைவில் புதிய சட்டம்!!

## ஐ.நா.வுடன் மல்லுக்கட்டுகிறது இலங்கை

கொழும்பு, மார்ச் 2

இலங்கைப் படையினருக்கு எதிரான வெளிநாட்டு விசாரணைகளைத் தடுப்பதற்கும், அவர்களுக்கு சட்டரீதியாக பாதுகாப்பை வழங்குவதற்கும் தேவையான விசேட சட்டங்களை இயற்றுவதற்கு இலங்கை அரசு தயாராகவே உள்ளது.

19 ➤



## குளவி கொட்டி விவசாயி உயிரிழப்பு

முல்லைத்தீவில் பரிதாபம்

முல்லைத்தீவு, மார்ச் 2

குளவிக் கொட்டுக்கு இலக்கான விவசாயி ஒருவர் உயிரிழந்

19 ➤

## இடறி வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மார்ச் 2

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் உள்ள அரிசி ஆலைக்கு, பொருத்து வேலைக்கு வந்த ஒருவர் வீழ்ந்து உயிரிழந்துள்

19 ➤

## கோவிட் தொற்றால் ஐவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 2

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று அரசதக

19 ➤




## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி நேற்றும் போராட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நேற்றைய தினம் கவனவீர்ப்புப் பேரணிகள் நடத்தப்பட்டன.

19 ➤

## அடிப்படைக் கோரிக்கைகள் கூட உத்தேசத் தீர்மானத்தில் இல்லை

### தமிழ் சிவில் சமூக அமையம் கடிதம்

கொழும்பு, மார்ச் 2

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச தீர்மானம் தமிழ் சமூகத்தின் அடிப்படைக் கோரிக்கைகளைக் கூட நிறைவு செய்யவில்லை என்று தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பாக பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட குழுமத்துக்கு

19 ➤

## வடக்கில் நேற்றும் 16 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடக்கு மாகாணத்தில் நேற்று 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட

19 ➤



## புதிய பஸ் நிலையம் செல்ல இ.போ.ச. சாரதிகள் மறுப்பு!

### வியாழன்வரை அவகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் நகரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை நடத்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

06 ➤

## கூரிய ஆயுதத்தால் தாக்கி தந்தையைக் கொன்ற மகன்

### நிலாவரையில் பயங்கரம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கூரிய ஆயுதத்தால் தாக்கி தனது தந்தையைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் 33 வயதுடைய மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

19 ➤





குருநாகல் வாரியபொலவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று மதியம் தீ விபத்து ஏற்பட்டது. எரிபொருள் நிரப்பு நிலையத்திலும், பெற்றோல் ஏற்றி வந்த பவுஸரிலும் பற்றிக்கொண்ட தீ கொழுந்து விட்டு எரிந்தது. நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஈஸ்டர் தாக்குதல்
## சர்வதேச விசாரணை மூலம் குற்றவாளிகளுக்குத் தண்டனை

கொழும்பு, மார்ச் 2

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்புள்ள அனைவருக்கும் தமது ஆட்சியில் சர்வதேச விசாரணை அல்லது உள்நாட்டு விசா

19 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

011 200 88 88
செலான் வங்கி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### நல்லாட்சிக் காலத்தில்

# கைவிடப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிக்கப் பணிப்பு!

**கொழும்பு, மார்ச் 2**

**கடந்த அரசின் காலப்பகுதியில் கைவிடப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிதி மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

அதன்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படவிருந்த மற்றும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் மதிப்பாய்வு செய்தார்.

பல அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த அரசின் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் கைவிடப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் பிரதமருக்கு சுட்டிக் காட்டினார். அவ்வாறு செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ள திட்டங்களையே மீள ஆரம்பிக்குமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அனைத்து திட்டங்களுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஈட்டும் வருமானத்துக்கு மேலதிகமாக பொது திறைசேரியிலி ருந்து தேவையான நிதியை ஒதுக்குமாறும் பிரதமர் தெரிவித்தார். (த-இ)

## பஸில் - மங்கள சந்திப்பு விரைவில்

கொழும்பு, மார்ச் 2

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கும், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் அடுத்த சில தினங்களில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது என்று அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விசேட அரசியல் பேச்சு ஒன்றுக்காக இந்த சந்திப்பு நடக்கவுள்ளது என்று கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த மங்கள சமரவீர, இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்.

இதனையடுத்து அவர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கிச் செயற்பட்டு வந்தார். 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வர பெரும் பங்காற்றிய மங்கள, இரண்டு வருடங்களில் மஹிந்த ராஜபக்ச அரசுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அமைச்சுப் பதவியிலிருந்து விலகி, எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பசில் ராஜபக்சவை சந்தித்த மங்கள சமரவீர, அவருடன் நீண்ட நேரம் நட்புறவுடன் கலந்துரையாடியிருந்தார்.

இந்த நிலையில், பசிலுக்கும் மங்களவுக்கும் இடையில் தற்போது நடைபெறவுள்ள பேச்சு எந்த நோக்கத்தைக் கொண்டது என்பது தொடர்பில் தெரியவரவில்லை. எனினும், இந்தப் பேச்சு ஏதேனும் புதிய அரசியல் கூட்டணிக்கான ஆரம்பமாக அமையலாம் என நம்பத்தகுந்த தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (த-இ)

## ராகு கால வழிபாடு

வவுனியா, மார்ச். 2

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீநகர் ஸ்ரீதுர்க்கை அம்மன் கோவிலில் ராகு காலப்பூசை நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

அனைத்து அடியார்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கோவில் பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய-110)




'சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துங்கள்' என்ற கோரிக்கையுடன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களை, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டதுடன் மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவும் தெரிவித்தார். அத்துடன், அவர்களின் நலன்களையும் விசாரித்து அவர்களுடன் கலந்துரையாடினார். (319)

## மத்தள விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைத்தொகுதி

கொழும்பு, மார்ச் 2

மத்தள விமான நிலையத்தில் பயணிகளின் நன்மை கருதி தீர்வையற்ற கடைத்தொகுதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் குறித்த கடைத்தொகுதியை பிரதமர் திறந்துவைக்கவுள்ளார் என்று விமான சேவைகள் மற்றும் இறக்குமதி வலய அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் டி.வி. சானக தெரிவித்துள்ளார். (த-இ)

## 22 மில்லியன் டொலர் சீனாவுக்கு தாரைவார்ப்பு!

*ரயில் இயந்திரச் சாரதிகள் சங்கம் விசனம்*

கொழும்பு, மார்ச் 2

ரயில் பயணச்சீட்டு தயாரிப்பது சீன அரசுக்கு வழங்கப்பட்டதன் மூலமாக, 22 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த நாட்டின் நிதி சீனாவுக்குச் செல்கின்றது என்று ரயில் இயந்திரச் சாரதிகள் சங்க செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இலங்கை ரெலிகொம் நிறுவனம் குறிப்பிட்ட பணியை இலவசமாகச் செய்து தர முன்வந்துள்ள போதிலும் அதனைச் சீனாவுக்கு வழங்குவதன் மூலம் இந்த நாட்டு மக்களின் பணம் நியாயமற்ற வகையில் செலவிடப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் பெற்று அந்தச் செயற்பாட்டை சீனாவிடம் ஒப்படைப்பதன் மூலம் பல குறைபாடுகள் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நடவடிக்கையை ஒழுங்கமைக்க சேவைக் கட்டணமாக மாதமொன்றுக்கு 1.2 மில்லியன் ரூபா வீதம் செலுத்த நேரிடும் என்றும் குறித்த பணியை இலங்கை ரெலிகொம் நிறுவனத்திடம் ஒப்படைத்து சகல வசதிகளையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கையில் குறித்த பணியை சீனாவிடம் ஒப்படைப்பதன் பின்னணியில் சதி ஏதாவது இருக்கக் கூடும் என்றும் சங்கச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-இ)

## அம்பிகையின் போராட்டத்துக்கு ஆதரவளிக்குக அனைவரும்!

*அழைக்கின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.*

யாழ்ப்பாணம், மார்ச் 2

எமது உரிமைக்காக தன்னைத் தானே வருத்தி சாத்வீக வழியில் போராடும் அம்பிகையின் போராட்டத்துக்கு உலகத் தமிழ் மக்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் ஒரு தீர்மானத்தை, ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் பிரிட்டன் முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, லண்டனில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் அம்பிகை செல்வகுமார். அவருடைய போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்று ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கி, உள்ளக பொறிமுறை ஒன்றுக்கான வாய்ப்பை வழங்கி, தமிழ் மக்களின் நீதியை முழுமையாக நீர்த்துப் போகச் செய்யும் ஒரு நடவடிக்கையையே பிரிட்டன் தற்போது சமர்ப்பிக்கும் தீர்மான வரைபு என்ற அம்பிகையின் நியாயமான கவலையையும் ஆதங்கத்தையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. என்றுள்ளது. (த-இ)

### 'பொ - பொ 'வுக்கு பதிலாக

## கதிர்காமத்துக்கு நடந்திருந்தால் புண்ணியமாவது கிடைத்திருக்கும்

### கிண்டலடிக்கின்றார் கருணா

கொழும்பு, மார்ச் 2

பொத்துவிலிலிருந்து பொலிகண்டிக்கு சென்றவர்கள், கதிர்காமத்துக்கு கால்நடையாகச் சென்றிருந்தால் முருகனைத் தரிசித்த புண்ணியமாவது எஞ்சியிருக்கும்.

இப்போது ஒன்றுக்கும் உதவாத நடைபயணத்தை செய்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன்.

அம்பாறையின் காரைதீவு பகுதியிலுள்ள 6 கோவில்களின் நிர்வாகத்தினருக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணி தேவையில்லாத ஒன்று.

பொத்துவிலிலிருந்து பொலிகண்டிக்கு போகாமல், பொத்துவிலிலிருந்து கதிர்காமம் வரையில் நடந்து சென்றிருந்தால் முருகனைத் தரிசித்த புண்ணியமாவது கிடைத்தி ருக்கும்.

தமிழ் மக்களுக்கு அரசாங்கம் உதவிகளை வழங்கும் இந்தக் காலகட்டத்தில் இதெல்லாம் தேவையா? கண்டனப் பேரணி தேவையில்லாத ஒன்று - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

### ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி கோரி

# கறுப்பு ஞாயிறு

### அறிவித்தார் கர்தினால் மல்கம் ரஞ்சித்



**கொழும்பு, மார்ச் 2**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகோரி, எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்துள்ளார்.**


உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணை முன்னெடுக் கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோத்தாபய அரசிடம் வலியுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும்கூட தனது வலியுறுத்தல்களை அவர் நேரடியாகவே முன்வைத்திருந்தார்.

தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் வழங்கப்பட்டது. இந்த அறிக்கையில் தமக்குத் திருப்தி யில்லை என்று பௌத்த பீடங்களும், மக்களின் பிரதிநிதி களும் தெரிவித்திருந்ததுடன், அதை ஏற்க மறுத்திருந்தனர். கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அறிக்கையை ஏற்க மறுத்து தனது கடும் அதிருப்தியைத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கையில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நோக்கிச் செல்ல வேண்டிவரும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

இத்தகையதொரு பின்னணியிலேயே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையை 'கறுப்பு ஞாயிறு' என்று அறிவித்துள்ளார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. (ம-க,இ)



## கொழும்பில் அதிகரிக்கும் கோவிட் தொற்று

கொழும்பு, மார்ச் 2

கொழும்பு மாவட்டத்தில்தான் தொடர்ந்தும் அதிக அளவான கொரோனா தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் கொழும்பு வாழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கொரோனாவைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிக்கையிட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினமும் 112 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் தலங்கம பகுதியில் அதிகளவான தொற்றாளர்கள் அவதானிக்கப்படுகின்றனர். மக்கள் எச்சரிக்கையாக இருப்பதன் மூலமே இந்தப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-கஇ)

## மாகாணத் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்!

### பிரதான கட்சிகள் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கு தமது தரப்பு தயாராகவே உள்ளது என்று பிரதான அரசியல் கட்சிகள் அறிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் கட்சிகள் என்பனவே மேற்படி அறிவிப்பை விடுத்துள் ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய முறைமையில் எதிர்வரும் ஜூனில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜூனில் தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதற்கான சட்டத்திருத்தத்தை இந்த மாதத்துக்குள் செய்தாக வேண்டும். எனவே, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அதற்கான யோசனை முன்வைக்கப்ப டக்கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஜூனில் தேர்தலை நடத்தினால் அதனை எதிர்கொள்வதற்கு தயாரா என பிரதான அரசியல் கட்சிகளிடம் வினவப்பட்டது. அதற்கு, 'தேர்தல் என்பது ஜனநாயக உரிமை. அது உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டும். மக்கள் நீதிமன்றம் முன் எந்நேரத்திலும் முன்னிலையாகு வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். பொதுத்தேர்தல் காலத்தின்போது சுகாதார நடைமுறைகளைப்பின்பற்றி பரப்புரை மேற்கொள்ள முடியும். அதேபோல நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலுக்கான களத்தை அரசு அமைத்துக்கொடுக்க வேண்டும். அரச இயந்திரத்தை பயன்படுத்தி தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகக் கூடாது' - என மேற்படி கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ம-44)

## 'மெகா' கூட்டணிக்கு தயாராகிறது ஐ.ம.ச.

கொழும்பு, மார்ச் 2

சகல கட்சிகளையும் இணைத்து, பரந்த அரசியல் வேலைத்திட்டமொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

கடந்தகால தவறுகளைச் சரிசெய்துகொண்டு ஜனநாயக ஆட்சியொன்றை உருவாக்குவோம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கூட்டணிகளை அமைத்துக் கொண்டு பரந்த அரசியல் வேலைத் திட்டமொன்றை உருவாக்கவுள்ளோம். இந்த அரசு ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்து விட்டது. எனவே மக்களுக்கு ஜனநாயக ஆட்சியை வழங்கியாக வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாம் பேச்சை முன்னெடுப்பது குறித்து இன்னமும் ஆராயவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மாறும் வரையில், அவர்களுடன் நாம் பேச்சுக்களை முன்னெடுக்கப் போவதில்லை- என்றார். (க-இ)

## பல்கலை மாணவர்கள் நேற்றும் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

நல்லூரில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் காலை முதல் முன்னெடுத்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதிகோரி பிரித்தானியா வில் வசிக்கும் அம்பிகை செல்வகுமார், சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை லண்டனில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்திருந்தார்.

அவரது கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவருடன் இணைந்து, வேலன் சுவாமிகள் மற்றும் அருட்தந்தையர்கள் இருவர் என ஐந்து பேர் இந்தப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் காலை ஆரம்பித்தனர். அதன் பின்னர் மேலும் பலர் அவர்களுடன் போராட்டத்தில் இணைந்தனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் ஊடாக இலங்கை அரசாங்கத்தின் போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்துக்கு எதிரான இன அழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும்.

தமிழ் இனத்தின் மீதான இன அழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (ம)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு ஏப்ரலில்

கொழும்பு, மார்ச் 2

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அதற்கமைவாக, செப்ரெம்பர் மாதத்தில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் கூறினார்.

குருநாகல் மலியதேவ முன்மாதிரி வித்தியாலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் பார்வையிட்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ற-இ)



## நுண்நிதி குத்தகை அடிப்படையில் உழவு இயந்திரங்கள் கையளிப்பு

மன்னார், மார்ச் 2

ஹற்றன் நஷனல் வங்கியின் மன்னார் கிளையால் வாடிக்கையாளர்கள் இருவருக்கு நுண் நிதி குத்தகை அடிப்படையில் இருசக்கர உழவு இயந்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

வங்கியின் முகாமையாளர் கந்தையா வடிவழகன், நுண் நிதித்துறை அதிகாரி எம்.ஜெயராஜசிங்கம், வங்கியின் கடன் பிரிவு அதிகாரி கே.அருண் பிரசாத் ஆகியோர் இணைந்து உழவு இயந்திரங்களை வழங்கினர். (ஐ-56)



# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்பு

## அதில் மாற்றமில்லை என்கிறார் செஹான்

**கொழும்பு, மார்ச் 2**

**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது என்று சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லாட்சி அரசில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள் தேசிய பாதுகாப்பைப் பலவீனப்படுத்தியது. அரச தலைவர்களின் முரண்பாட்டை அடிப்படைவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டால் அப்பாவி மக்கள் பலியாகினர்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினர் சுயாதீனமாகவே விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து, கடந்த மாதம் ஜனாதிபதியிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இந்த அறிக்கையை விமர்சனத்துக்கு உள்ளாக்குவது தவறான செயற்பாடாகும். அரசின் வசமுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாதுகாத்துக் கொள்ள உண்மைக்குப் புறம்பாகச் செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது.

இந்தக் குண்டுத்தாக்குதலுக்கு சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பொறுப்பு கூற வேண்டும் என குறிப்பிட்டோம், இன்றும் குறிப்பிடுகிறோம்- என்றார். (க-இ)

# அறிக்கையில் திருப்தியில்லை

## நாலக தேரர் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 2

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பயனற்றது. அறிக்கையின் ஊடாக தேசிய பௌத்த அமைப்புக்களைத் தடை செய்ய அரசு முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று தேசிய ஒருங்கமைப்பு அமைப்பின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த அறிக்கைக்கு பௌத்த தேரர்கள் அனைவரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம்.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு விரைவாக நிறைவேற்ற வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கவுள்ளோம். பௌத்த அமைப்புக்கள் நாட்டில் அடிப்படைவாதத்தைத் தூண்டுகின்றன என்ற தவறான நிலைப்பாட்டை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை, சமூகத்தின் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தைத் திட்டமிட்டது யார் என்ற உண்மையை ஆணைக்குழு பகிரங்கப்படுத்தவில்லை. விசாரணை அறிக்கை அரசியலாக்கப்பட்டுள்ளது- என்றார். (க-இ)

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தாவுக்கு வாய்ப்பில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் ஆருடம்



கொழும்பு,மார்ச் 2

அடுத்த முறை கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அவருக்கு அதிக வாக்குகளைப் பெற எவ்வித வாய்ப்புக்களும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார். இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிகளில் அதிகளவு சிங்கள பௌத்த வாக்குகள் பெற்று பதவிக்கு வந்தவர் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மாத்திரமே. கடந்த கால ஜனாதிபதிகள் எவரும் இத்தகையை வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை. எனினும் இன்னொரு தேர்தலில் அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று நினைக்கவில்லை. அதிக வாக்குகளை அவர் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் இனிமேல் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# வாகன விபத்தில் ஒருவர் சாவு!

கொழும்பு, மார்ச் 2

புத்தளம்- கொழும்பு பிரதான வீதியின் நாகவில்லுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் (வயது 36) உயிரிழந்துள்ளார். பங்கதெனியப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிர் திசையிலிருந்து பயணித்த லொறி ஒன்றுடன் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ற-இ)


# மரண அறிவித்தல்



## கந்தையா சிவராசா

**தோற்றம் 04.04.1951** **மறைவு 01.03.2021**

யாழ்ப்பாணம் பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், பாக்கியவனம் அல்வாயை புகுந்த இடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா நேற்று (01.03.2021) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னம் தம்பதியினரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற அரியகுட்டி பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், சந்திராவதியின் அன்புக் கணவரும், நிமலன் (ஆசிரியர், மு/மாங்குளம் மகா வித்தியாலயம்), நிறஞ்சன் (E.S.P.N நெல்லியடி), நிரோஜன் (ஆசிரியர், நயினாதீவு மகா வித்தியாலயம்), நிகாஷன் (நீதவான் நீதிமன்றம்-யாழ்ப்பாணம்), நிதர்சன் (தொழிநுட்ப உத்தியோகத்தர் RIDEP- வடமாகாணசபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசியா, தனுஷா, கார்த்திகா (பிராந்திய முகாமையாளர்- மத்திய வங்கி, கிளிநொச்சி), விஸ்வேதிகா (ஆசிரியர்- யா/வட இந்து மகளிர் கல்லூரி), றொஷானா ஆகியோரின் அன்பு மாமனாரும், றனீத், ஆருத்ரா, அஜீஸ், லோகித், மேஜித், சங்கீர்த், சபீஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசமணி, நற்குணம் மற்றும் மகேஸ்வரி (பாக்கியம்), செல்வரட்ணம் (VKS), இராஜேஸ்வரி (சந்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரதாசன், சத்தியதாசன், சத்தியகலா, சபேஷன், காலஞ்சென்ற சௌந்தரதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24/2 பாரதி வீதி,**
**கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**077 703 1176**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# மைத்திரிக்கு இஷ்டமில்லை

கொழும்பு,மார்ச் 2

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விருப்பமில்லை என்று அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிய ஆங்கில ஊடகமொன்று அவரைத் தொடர்புகொள்ள முயற்சித்த நிலையில், அவரது செய்தித் தொடர்பாளர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்த நேரத்தில் பதிலளிப்பது இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என அவர் தெரி வித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஈஸ்டர் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# அறிக்கைக்கு சு.க. எதிர்ப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக எதிர்க்கிறது என்று கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமானது. அதற்கு எமது தரப்பில் வழங்க வேண்டிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராகவுள்ளோம். எனினும் அந்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அன்றைய அரசில் பொறுப்புக் கூற வேண்டிய வேறு எந்தவொரு நபர் தொடர்பிலும் அறிக்கையில் கூறப்படவில்லை. - என்றார். (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சீனாவுக்கு என்ன உரிமை?

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து மேற்கத்தேய நாடுகள் கொண்டிருக்கும் கரிசனையைக் கண்டித்துள்ளது சீனா. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான 'நாடு சார்' தீர்மானத்தின்போதே சீனாவிடம் இருந்து இந்த ஆதரவுக் குரல் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீன முதலீடுகள், இந்தியாவுக்கு எதிரான கூட்டணி மற்றும் ஆசிய வல்லாதிக்கப் போட்டி என்பவற்றின் அடிப்படையில் இத்தகையதொரு ஆதரவுத் தொனி சீனாவிடம் இருந்து இலங்கைக்குக் கிடைக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், என்ன உரிமை மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் இந்த விவகாரத்தில் சீனா தலையிடுகிறது என்பதையும், மேற்கத்தேய நாடுகளின் நகர்வுக்கு முட்டுக்கட்டை போடுகின்றது என்பதையும் அது தெளிவுபடுத்த வேண்டும்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரின் போதும், அதற்கு முன்னரும்கூட, இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. இது குறித்த பொறுப்புக் கூறல்களுக்கும், மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் இலங்கைக்குப் போதும்போதும் என்கின்ற அளவுக்கு அவகாசங்கள் வழங்கப்பட்டாயிற்று. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் கொழும்பின் இணை அனுசரணையுடனும் இந்த அவகாசம் வழங்கப்பட்டதென்பது, சர்வதேசத்தின் பக்கமுள்ள உச்சக்கட்டப் பிடிமானம். எனினும் இந்த விவகாரத்தில் கொழும்பு மேற்கொண்ட – மேற்கொள்கின்ற நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகள் தமக்கு நீதியை வழங்கும் என்பதில் இம்மியும் நம்பிக்கை அற்றவர்களாகவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உள்ளனர். நிலைமை இவ்வாறிருக்கையில், குறித்த நாடுசார்தீர்மானத்தில், 'இலங்கை மனித உரிமைகளை நிலைநாட்ட இலங்கை அரசு சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்றும். அது தமக்குத் திருப்திதரும் வகையில் உள்ளது என்றும், நற்சான்றுப் பத்திரம் வழங்கியுள்ளது சீனா.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை எதிர்கொண்ட தமிழ் மக்கள், உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் நீதி கிட்டும் என்ற நம்பிக்கை அற்றவர்களாக, சர்வதேசப் பொறிமுறைகளைத் தேடி நாடியுள்ள நிலையில், இலங்கையின் உள் விவகாரத்தில் சர்வதேசத் தலையீட்டையும் சீனா கண்டித்துள்ளது. இறுதிப்போரின்போது கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி இங்கு இடம்பெறும் போராட்டங்கள் மிகையானவை என்று சீனா கூறுகிறது. நேரடிப் பாதிப்பை எதிர்கொண்ட மக்களின் கோரிக்கையே, ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டையும் சர்வதேசப் பொறிமுறைகளையும் அழுத்தம்திருத்தமாக வலியுறுத்துகின்ற நிலையில், அவர்களின் அவலத்தை மழுங்கடித்து, மறுத்துரைத்து, திசைதிருப்ப தார்மீக அடிப்படையில் சீனாவுக்கு என்ன உரிமையுள்ளது?

ஜே.வி.பியின் தலைவரான அனுரகுமார திஸாநாயக்க சொன்னதுபோன்று, மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்து சர்வதேசத்தைத் தேடுவதற்கும், நாடுவதற்கும் கொழும்பின் அசமந்த நடவடிக்கைகளே காரணம். நீதி இங்கே கிட்டாது, சுயாதீனம் என்பது இங்கில்லை என்பது முழுமையாகத் தெரிந்த பின்னர் தான், தமிழர்கள் தம் உரிமைக்கோரிக்கையை சர்வதேசம் நோக்கித் திருப்பினார்கள். இது சீனாவுக்கு முதலில் புரிய வேண்டும்.

தியான்மென் சதுக்கத்தில் தன் சொந்த மக்களைக் கொன்று நரபலி வேட்டையாடிய சீனாவுக்கு ஈழத்துப் படுகொலைகள் ஒன்றும் பெரிய விடயமல்லத்தான்.




நன்றி - நாமல் அமரசிங்க

# செவ்விந்தியர்களின் கதியே தமிழர்களுக்கும் ஏற்படலாம்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2

**போரின் பின்னர் வடக்கில் வனவளத் திணைக்களத்தின் ஊடாகவும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாகவும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் பல இலட்சம் ஏக்கர்களை அரசு கையகப்படுத்தியுள்ளது. அரசு பச்சை முகமூடி அணிந்துகொண்டு, அரசு தொடுத்திருக்கும் இந்தப் போர் தொடர்பாக நாம் விழித்துக் கொள்ளாவிடில் கடைசியில் அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களின் கதியே எமக்கும் ஏற்படலாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் சமகால அரசியல் உரையரங்கு இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் வனவள அரசியல் என்னும் தலைப்பில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

போர் முடிவடைந்த பின்னர் வனவளத் திணைக்களம் வடக்கில் ஐந்து லட்சம் ஏக்கர் காடுகளைப் புதிய ஒதுக்குக் காடுகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனுள் ஒரு லட்சம் ஏக்கர் காடுகளைப் பேணல் காடுகளாகப் பிரகடனப்படுத்தி யுள்ளது. போர்க்கால இடப்பெயர்வின்போது எமது மக்களால் கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களிலும் மேய்ச்சல் நிலங்களிலும் மரங்கள் வளர்ந்து துணைக்காடுகளாகி உள்ளன. இவற்றையும் உள்ளடக்கியே வனவளத் திணைக்களம் காடுகளின் எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளது. இதற்குள் நாம் நுழைவதைக் காடுகள் பேணல் கட்டளைச் சட்டம் தடை செய்துள்ளது. வன ஜீவராசிகள் திணைக்களம் தேசியப் பூங்காக்கள் என்ற பெயரில் மன்னாரிலும் சுண்டிக்குளத்திலும், நெடுந்தீவிலும் குடியிருப்புகளையும் பயிர்ச்செய்கை நிலங்களையும் உள்வாங்கி இரண்டே முக்கால் லட்சம் ஏக்கர்கள் நிலப்



பரப்பைத் தேசிய பூங்காக்களாக அறிவித்துள்ளது. நெடுந்தீவின் நான்கில் ஒரு பாகம் இதற்குள் அடக்கம். இவை வெளிப்புறப் பார்வைக்கு சூழல் பாதுகாப்புக்குரிய நல்ல நடவடிக்கைகளாகவே தோன்றும்.ஆனால், இவற்றின் பின்னால் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் சூழல் அரசியல் உரு மறைப்பாக உள்ளது - என்றார்.

(ப)

# சுகாதார விதிமுறைக்கு அமைய க.பொ.த சா/த பரீட்சை நேற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 2

கொரோனாவால் பிற்போடப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நேற்றையதினம் ஆரம்பமானது.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்களில் நடைபெற்று வரும் இப் பரீட்சையில், 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். வடக்கு மாகாணத்தில் 44 ஆயிரத்து 245 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவர்களில் 23 ஆயிரத்து 679 பேர் பாடசாலைப்



பரீட்சார்த்தி கள். 20 ஆயிரத்து 566 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்பது குறிப்பிடத் தக்கது.

(ஐ-20,110,214,56)

# ஐ.நாவின் தீர்மானத்தால் சரிகிறது பொருளாதாரம்

## அமைச்சர்கள் சிலர் கவலையில்

**கொழும்பு, மார்ச் 2**

**ஐ.நா மனித உரிமை பேரவையின் தீர்மானத்தால், இலங்கையின் பொருளாதார விடயங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கவலையடைந்துள்ளனர்.**

இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சரும், அதன் அதிகாரிகளும் எடுக்கவேண்டிய தேவையுள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித் துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வெளிவிவகாரக் கொள்கைகளை ஜனாதிபதி செயலகமே பெருமளவுக்குக் கையாள்கின்றது என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திக்கும்போது, வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் குறித்த சந்திப்பில் இல்லாத நிலையே தொடர்கின்றது என்று அவர் தெரிவித்தார். (சு-இ)

# சு.கவின் பிளவுக்கு மஹிந்தவே காரணம்

## ரோஹன குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 2

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்தியவர் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவே என்று கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக அதன் செயற்பாடுகளை முடக்க சூழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்னர் சிறிலங்கா பொதுஜன பெரமுன எம்முடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை மீறப்பட்டுள்ளது. அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், தேசியப் பட்டியல் மற்றும் இதர பதவிகள் விடயத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ச எமது கட்சியை இரண்டாக பிளவுபடுத்தி புதிய கட்சியைத் தொடங்கினார். தேர்தலுக்கு முன் வழங்கிய வாக்குறுதிகளை மீறி, கட்சியை மீண்டும் சரிவுக்கு இட்டுச் செல்லவும், கட்சியின் தலைவர் மீது நீதிமன்ற வழக்கு சுமத்தி மேலும் கட்சியின் செயற்பாட்டை மழுங்கடிப்புச் செய்யவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இந்த முயற்சியைத் தோற்கடிக்க அனைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் முற்போக்கு சிந்தனை உடையவர்கள் போன்றோர் ஒன்றுதிரள வேண்டும் - என்றார். (சு-இ)

# ரெலோவின் பேச்சாளராக சுரேந்திரன் நியமிப்பு

வவுனியா, மார்ச் 2

தமிழீழ விடுதலை இயக்கத்தின் உத்தியோகபூர்வப் பேச்சாளராக குருசாமி சுரேந்திரன் நியமிக்கப்பட்டார். ரெலோ அமைப்புக் குழுக்கூட்டம் வவுனியா வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது குறித்த கட்சிக்கு பேச்சாளர் ஒருவர் அவசியம் என அனைவராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமையால், மேற்படி பேச்சாளராக குருசாமி சுரேந்திரனை நியமிப்பதற்கு கட்சியின் தலைமைக்குழுவால் ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-110)



## "பொ-பொ" பேரணி

# சிவாஜிலிங்கத்திடமும் நேற்று வாக்குமூலம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம் கே. சிவாஜிலிங்கத்திடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்த வாக்குமூலத்தை வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டில் வைத்து ஒட்டுசுட்டான் பொலிஸார் நேற்று மதியம் பெற்றுக்கொண்டனர். சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக வாக்குமூலம் பெறப்பட்டது. நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்வது தொடர்பிலும், பேரணியில் பங்குபற்றியமை தொடர்பிலும் காரணங்கள் குறித்து பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-26)

# அரசைப் பலவீனப்படுத்த அரசுக்குள்ளேயே சூழ்ச்சி

## ஆனந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2



தற்போதைய அரசைப் பலவீனப்படுத்த, அரசுக்குள்ளேயே சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தவறுகளை அரச தலைவர்கள் கண்டறிந்து திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்களே தோற்றம் பெறும் என்று அபயராம விகாரையில் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தவறுகளைச் சுட்டிக்காட்டி ஆட்சியாளர்களை நல்வழிப்படுத்துவது மதத் தலைவர்களின் பொறுப்பாகும். தவறுகளை ஆட்சியாளர்கள் திருத்தி, மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய சிறந்த முறையில் ஆட்சி அதிகாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஒரு தரப்பினர் தாங்கள் அரசின் விசுவாசிகள் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசுக்கு எதிராக சூழ்ச்சிகளை முன்னெடுக்கின்றனர். ஆளும் தரப்பினர்களின் ஒரு சிலரது செயற்பாடுகள் வெறுக்கத்தக்க செயற்பாடு களாகக் காணப்படுகின்றன. ஆகவே அரச தலைவர்கள் எந்த நிலையிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். மாறுபட்ட பல கருத்துக்கள் அரசைப் பலவீனப்படுத்தும் - என்றார். (சு-இ)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

## புதிய...

அதேவேளை, இ.போ.ச. பஸ் சேவைகளை புதிய பஸ் நிலையத்தில் நடத்த மறுப்பதால், நெடுந்தூர தனியார் பஸ்களும் இன்று புதிய பஸ் நிலையத்தில் சேவைகளில் ஈடுபடாது என்று வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சேவையினர் தங்கள் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு எதிர்வரும் வியாழக்கிழமை வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

புதிய பஸ் நிலையத்தில் சேவைகளை நடத்த இணக்கம் தெரிவித்து, தனியார் பஸ் சேவைகள் நேற்று புதிய பஸ் நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டன. எனினும் இ.போ.ச. பஸ் சேவைகள் புதிய பஸ் நிலையத்தில் இருந்து நடத்தப்படவில்லை.

தங்கள் உயர் அதிகாரிகளிடம் இருந்து எந்த அறிவித்தலும் வரவில்லை என்று இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான அதிகாரி அல்லது சாலை முகாமையாளருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

அவர்களுக்குப் பதிலளித்த யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நெடுந்தூர பஸ் நிலையம் தொடர்பாக பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் வரவில்லை. தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டபோதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. அதனால் இன்றுமுதல் (நேற்று) நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்துதான் சேவைகள் நடக்க வேண்டும். தவறினால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். அதையடுத்து அங்கு தர்க்கம் ஏற்பட்டு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சாரதிகள் மற்றும் நடத்துநருடன் கலந்துரையாடினர்.

நெடுந்தூர பஸ் சேவைகள் அனைத்தும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தில் இருந்தே நடைபெற வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். தனியார் பஸ்கள் இன்று (நேற்று) காலை முதல் அங்கிருந்து சேவையில் ஈடுபட ஆரம்பித்து விட்டன. இ.போ.ச. பஸ்களும் அங்கிருந்து சேவைகளை வழங்க வேண்டும். நாளையில் (இன்று) இருந்து அங்கிருந்தே பஸ் சேவைகள் கட்டாயமாக நடைபெறும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அதேவேளை, இ.போ.ச. பஸ்கள் புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை வழங்க மறுப்பதால், தனியார் பஸ்களும் இன்று முதல் புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை வழங்கா என்று வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழப்பத்தை அடுத்து நேற்று மாலை தொழிற்சங்கங்கள், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் இலங்கை போக்குவரத்துச் சபையினர் தங்கள் முடிவை அறிவிப்பதற்கு எதிர்வரும் வியாழக்கிழமைவரை அவகாசம் கோரியுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

சுமார் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய பஸ் நிலையக் கட்டடத்தை இடிக்க முடியாது, கறையான் அரிக்கவும் விட முடியாது. எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 4 மணிவரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த காலப்பகுதியில் தனியார் பஸ் சேவையையும் பழைய இடத்திலிருந்து நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமைக்குப் பின்னர் அடுத்தகட்டம் தொடர்பாக ஆராய்வோம் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தெரிவித்தார். (எ-26)

# ஜனாஸா அடக்கத்துக்கு சூனியமான தீவு

கொழும்பு, மார்ச் 2

கொவிட் 19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும், முஸ்லிம்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய, சூனியப் பிரதேசமான தீவைத் தெரிவுசெய்ய கொவிட் - 19 செயலணிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அதேநேரம் நல்லடக்க வழிமுறைகள் உள்ளடங்கிய வழிகாட்டி அறிக்கையை இந்த வார இறுதிக்குள் வெளியிடவும் சுகாதாரப் பணியகம் தீர்மானித்துள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்கக்கோரி, தொடர்ச்சியாக முஸ்லிம் தரப்பினர் வலியுறுத்தி வந்தனர். சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தேசிய அழுத்தங்கள் காரணமாக, தற்போது உடல்கள் நல்லடக்கம் செய்ய அனுமதிக்கப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் நல்லடக்கம் செய்ய முன்னர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் மற்றும் பொது இடங்களில் அல்லது பொது மயானங்களில் நல்லடக்கம் செய்ய அனுமதிக்க முடியுமா என்பவை குறித்து கொவிட்- 19 செயலணிக் கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)

# புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவையில்லையேல் சட்டம் பாயும்

## இ.போ.சவுக்கு யாழ். மாநகர முதல்வர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 2**

**யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து தூர சேவையில் ஈடுபடாத, அனைத்து பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாநகர சபை முதல்வர் எச்சரித்துள்ளார்.**



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தில் நேற்று காலையில் இருந்து தனியார் துறையினர் சேவையில் ஈடுபட்டு வரும் நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் குறித்த பேருந்து நிலை யத்திலிருந்து சேவையில் ஈடுபடுவதைப் புறக்கணித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் மத்திய பேருந்து நிலையத் துக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் சென்ற யாழ் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண் ணன் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றம் நடத்துநர்களுக்கு குறித்த விடயத்தைத் தெளிவுபடுத்தி, நெடுந்தூர பேருந்து நிலையத்தி லிருந்தே வெளி மாவட்டத்துக்கான சேவைகள் இடம்பெறும் எனவும், குறிப்பாக யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தி லிருந்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் நடத்துநர்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்திருந்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர்கள், தமது உயர் மட்டத்திலிருந்து தமக்கு எந்த வித அறிவித்தலும் வழங்கப்படவில்லை எனவும், குறித்த விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வட மாகாணத்துக்கு பொறுப்பான அதிகாரி அல்லது சாலை முகாமையாள ருடன் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்துமாறும் முதல்வரிடம் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த யாழ்.மாநகர முதல்வர், 'கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நெடுந்தூர பேருந்து நிலையம் தொடர்பில் பல்வேறுபட்ட கூட்டங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகளை அழைத்தபோதும் அவர்கள் சமூகமளிக்கவில்லை. தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டும் அவர்கள் பதிலளிக்கவில்லை. எனவே இனியும் அனுமதிக்க முடியாது. இன்றிலிருந்து நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்துதான் குறித்த சேவைகள் இடம்பெற வேண்டும். தவறும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதனையடுத்து இலங்கை போக்குவரத்து சபை பணியாளர்கள் தாங்கள் பேருந்துசேவையை நிறுத்தி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம் எனத் தெரிவித்தனர். (ஜ-20)

## பொலிஸ் நிலையங்களில்

# சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்த நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 2

இலங்கையில் அண்மைக் காலமாக பொதுமக்கள் மீது பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. எனவே அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சி.சி.ரி.வி. கமராக்களைப் பொருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பொலிஸாரால் பொதுமக்கள் மீது முன்னெடுக்கப்படும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. எனவே நீதிமன்ற வளாகத்தில் சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதைப் போன்று, பொலிஸ் நிலையங்களிலும் பொருத்தப்பட வேண்டும்.

அத்துடன் 'உடல் கமராவை' பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடையில் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ற-இ)



# உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு விரைவில் வரி அதிகரிக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொடிகாமம், மார்ச் 2**

**உருளைக்கிழங்குக்கான இறக்குமதிவரி விரைவில் அதிகரிக்கப்படும் என்று நிதி, மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் நேற்றுமுன்தினம் குப்பிளான் பகுதியில் நடைபெற்ற உருளைக்கிழங்கு அறுவடை விழாவுக்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.

தொடர்ந்து விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சர், விவசாயிகளின் பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார். குறிப்பாக உருளைக்கிழங்குக்கான வரியை அதிகரிப்பதன் ஊடாகவே உள்ளூர் விவசாயிகளுக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர், விவசாயிகள் சார்பாக சுட்டிக் காட்டியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் உருளைக் கிழங்குக்கான வரியை ஓரிரு வாரங்களுக்குள் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாயிகளிடம் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், தற்போது உழுந்து இறக்குமதியைத் தடை செய்து இருப்பதனால், உள்நாட்டு விவசாயிகள் உழுந்தைப் பயிரிட்டு நல்ல இலாபத்தைப் பெறமுடியும். அத்துடன் தற்போது இருக்கும் சூழ்நிலையில் உழுந்து இறக்குமதி தடை நீடிக்கும். எனவே விவசாயிகள் எந்தப் பயமும் அற்ற நிலையில் உழுந்தைப் பயிரிடலாம் எனத் தெரிவித்தார். (ஐ-159)



## முதல்வர் வேட்பாளர்களாக களமிறங்கும் எம்.பிக்கள்!

கொழும்பு, மார்ச் 2

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நடப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராகி வருகின்றனர். இது தொடர்பில் கட்சி உயர்மட்டங்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ள அவர்கள், முதல்வர் வேட்பாளர் பதவி கிடைக்கும்வரை காத்திருக்கின்றனர்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் எம்.பிக்களே இவ்வாறானதொரு அரசியல் நகர்வில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் பதவி துறக்கும் அறிவிப்பை இவர்கள் வெளியிடக் கூடும்.

ஊவா மாகாணத்தில் பொதுஜன பெரமுன சார்பில் எம்.பியொருவர் முதல்வர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். நாடாளுமன்றத்தில் அவரின் இடத்தை நிரப்புவதற்காக உதித்த லொக்கு பண்டார எம்.பியாக பதவியேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட உதித்த லொக்கு பண்டார விருப்பு வாக்கு பட்டியலில் ஏழாம் இடத்தில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. சப்ரகமுவ மாகாணத்தில் மொட்டு கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு அணிகளில் இருந்தும் எம்.பிக்களே முதல்வர் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் முன்னாள் எம்.பிக்கள் சிலரை களமிறக்குவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது. இதற்கிடையில் சுயேட்சையாக போட்டியிடுவதற்கு பல குழுக்கள் தயாராகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

## ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசி; பரிசீலிப்பதற்கு இலங்கை அரசு தயார்

கொழும்பு, மார்ச் 2

அமெரிக்காவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஒரு டோஸ் அளவு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசியைப் பரிசீலிக்க இலங்கை தயாராகவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு டோஸ் அளவு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு அமெரிக்க மருந்துக் கட்டுப்பாட்டாளர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். இந்த நிலையில், குறித்த தடுப்பூசிக்கு இலங்கை தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டால் அது பரிசீலிக்கப்படும் என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளன.

தடுப்பூசியின் செலவு குறைவாக உள்ளது என்றும், தடுப்பூசியை குளிர்சாதனப் பெட்டியில் சேமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இதுவரை தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு ஒப்புதல் கோரும் விண்ணப்பம் கிடைக்கவில்லை என்று அந்தச் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி மருத்துவர் கமல் ஜெயசிங்க தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் பாரத் பயோடெக் மற்றும் ரஷ்யாவின் ஸ்புட்னிக் 5 தடுப்பூசி மற்றும் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசி மற்றும் இந்தியாவின் உள்நாட்டு கொவிட் 19 தடுப்பூசி ஆகியவற்றைப் பயன்படுத்த ஒப்புதல் கோரி விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## ஷானியின் பிணை மனு 17இல் விசாரணைக்கு



கொழும்பு, மார்ச் 2

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோர் பிணை கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த உத்தரவை மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது. முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன கைதுசெய்யப்பட்ட வழக்கில், சாட்சியங்களை சோடித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## பரீட்சார்த்திகள் வரவில் திருப்தி

கொழும்பு,மார்ச் 2

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் வரவு திருப்தியளித்துள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு பரீட்சை நிலையங்களில் 38 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று ஆரம்பமாகியுள்ள பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் தோற்றுகின்றனர். இவர்களில் 4 லட்சத்து 33 ஆயிரத்து 746 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். நாடு பூராகவும் 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் நலன் கருதி சகல மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் இரண்டு விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## அதிரடிப்படை சிப்பாய் கஞ்சாவுடன் கைது!



அம்பாறை, மார்ச்.2

பொத்துவிலில் இருந்து அனுராதபுரத்துக்கு மோட்டார்சைக்கிளில் கஞ்சா கடத்திச் சென்ற விசேட அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு-கல்லாறு பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த சனிக்கிழமை அதிகாலை அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 215 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (வ-10)

## 24 மணிநேரத்தில் 12 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச்.2

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில், நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். மீதமுள்ள நான்கு பேர் கடந்த வாரம் பதிவான விபத்துக்களின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். வீதி விபத்துக்களைக் குறைக்க மோட்டார் வாகன போக்குவரத்து திட்ட விதிகளை அவசியம் கடைப் பிடித்து வாகனங்களை செலுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (வ-இ)

# மணல் அகழ்வுக்கான பொறுப்பை பொது அமைப்புகளுக்கு வழங்குக

## அக்கராயன் மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 2**

**கிளிநொச்சி, அக்கராயன் ஆற்றின் மணல் அகழ்வுக்கான பொறுப்பை அந்தப் பகுதி பொது அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



இது குறித்து மக்கள் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் அக்கராயன் ஆற்றில் மணல் அகழ்வுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டபோதும், பொது அமைப்புகளுக்கு அவற்றின் வருமானங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. தற்போதும் மாவட்டச் செயலகத்தால் அக்கராயன் ஆற்றில் மணல் அகழ்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
அக்கராயன் குளத்தின் கீழான விவசாய அமைப்புகள், நிதி வளமற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. மணல் அகழ்வால் தனிநபர்கள் பெரும் வருமானத்தைப் பெறும் நிலையில், அக்கராயன் குளத்தின் கீழான விவசாய அமைப்புகளிடம் மணல் அகழ்வுக்கான பொறுப்பை வழங்குவதன் மூலம் விவசாய அமைப்புகள் தமது விவசாய நிலத்துக்குப் பாதிப்பு வராத வகையில் பாதுகாப்பான முறையில் மணல் அகழ்வை மேற்கொண்டு அதனூடாக வருகின்ற வருமானத்தின் மூலம் தமது விவசாய அமைப்புகளையும் பலப்படுத்தி, குளத்தின் கீழான முக்கியமான வேலைகளையும் மேற்கொள்ள முடியும்.
இதற்கான அனுமதியை மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கனியவளத் திணைக்களம் என்பவை வழங்க வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் அக்கராயன் ஆற்றில் தனிநபர்கள் தன்னிச்சையாக மேற்கொண்ட மணல் அகழ்வால் சூழலியல் பாதிக்கப்பட்டுள்ளது - என்றனர். (ஐ-13)



## விவசாயப் பண்ணை திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 2
போரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்கில் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் விவசாயப் பண்ணை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.
மறைந்த ஆபேல் லூக்கஸ்ஸின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது உறவுகளால் இந்தப் பண்ணை அமைக்கப்பட்டது.
நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு சைக்கிள்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய முதல்வர் றொபின்சன் ஜோசெப் அடிகளார், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க.ஜனமேஜெயந்த், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் ஒளித்திலகன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்னாள் நிர்வாக கிராம அலுவலர் சிவதாஸ் ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-19,115)



## அடிக்கல் நடுகை விழா

கிளிநொச்சி, மார்ச் 2
வரவேற்புப் பெயர்ப் பலகை அமைப்பதற்கான அடிக்கல் பூநகரி பிரதேச சபையால் கடந்த சனிக்கிழமை நாட்டப்பட்டது. இதற்கான அத்திபாரக் கல்லை கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர்கள் இணைந்து நட்டனர். நிகழ்வில் கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபை உறுப்பிணர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். குடமுருட்டி ஆற்றங்கரையில் அந்தியேட்டி மடம் ஒன்றை நிறுவும் பணிகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. (வ-10)



முல்லைத்தீவு தண்டுவான் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இராணுவத்தினரால் போசாக்குப் பொதிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. (வ-70)



## தெங்கு உற்பத்திகளுக்கு எழுதுமட்டுவாழில் நிறுவனம்


றொபிக்கல் கிறீன் ஏர்போர்ட்ஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தால் தேங்காய் சேகரித்தலும் ஏற்றுமதி செய்தலும் மற்றும் தும்பு உற்பத்தி செய்தலுக்கான கிளை நிறுவனம் ஒன்று எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைக்கப்பட்டு யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவால் நேற்று முன்தினம் 28ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.
இது தொடர்பில் நிறுவன இயக்குநர் தெரிவித்ததாவது:
இந்தக் கிளை நிறுவனத்தின் மூலம் நாட்டினுடைய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய முடிவதுடன், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களில் உள்ளவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கவும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன - என்றார். (ச-இ)

## துணுக்காய் ப.நோ.கூ சங்க கிளைக்குழு நிர்வாகக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இவ்வாண்டுக்குரிய கிளைக்குழுக்களின் நிர்வாகக் கூட்டம் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.
கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கோட்டை பகுதியில் உள்ள சங்கத்தின் களஞ்சியம் சேதமடைந்திருப்பதால் அதைப் புனரமைப்புச் செய்வதுடன், புத்துவெட்டுவான் பகுதியில் சங்கக் கிளை விற்பனை நிலையம் ஒன்றைக் கட்டுவது மற்றும் தற்பொழுது சங்கத்தினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வரும் நிலையில் அந்த நெல்லை காயவிடுவதற்கு போதிய தளம் இல்லாத காரணத்தால் நெல் காயவிடும் தளம் ஒன்றை இவ்வருடம் அமைப்பது தொடர்பிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (ய-12)







யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ய) படங்கள் - ஐ.சிவசாந்தன்

# த.தேசியப் பேரவையில் முன்னணி பங்கேற்காது

## கட்சியின் தலைவர் அறிவிப்பு



**யாழ்ப்பாணம்,மார்ச் 2**

**தமிழ்த் தேசியப்பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கட்டமைக்கப்படவுள்ள தமிழ்த் தேசியப் பேரவையில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பங்கேற்க மாட்டாது என்று கட்சியின் தலைவரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியப் பேரவையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஆரம்பக் கூட்டங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்றிருக்கவில்லை. இந்த நிலையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தமிழ்த் தேசியப் பேரவையில் பங்கேற்குமாறு கஜேந்திரகுமார் தலைமையிலான அணியிருக்கு தனிப்பட்ட அழைப்பு விடுத்துள்ளார். இதனையடுத்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவ்வித மான தீர்மானத்தை எடுத்துள்ளது என்பது குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழ்த் தேசியப்பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற கட்டமைப்பை உருவாக்குவது நல்லவிடயம். இதுபற்றி நீண்ட நாள்களாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் ஒற்றுமைக்குத் தடையானவர்கள் அல்ல. அதனை விரும்பாத வர்களும் அல்ல. ஆனால் ஒற்றுமை என்பது கொள்கை அடிப்படையிலானதாக இருக்க வேண்டும். அண்மைய காலங்களில் ஒற்றுமையின் பெயரால் தனிநபர் நலன்களை அடிப்படையாக வைத்தே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

அந்த வகையில் தமிழ்த் தேசியப் பேரவையில் பங்கேற்பதற்கான அழைப்பொன்றை மாவை.சோ. சேனாதிராசா விடுத்திருந்தார். எனினும் நாம் அதில் பங்கேற்பதில்லை என்றே தீர்மானித்திருக்கின்றோம். கொள்கை வழியில் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் பேரவை பயணிக்கும் என்று எவ்வாறு கருத முடியும். ஆகவேதான் அதில் இணைந்து பயணிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம். என்றார். (க-இ)

## தமிழ் கட்சிகள் ஒன்றிணைவு; ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் ஆராய்வு

மன்னார், மார்ச், 2

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) மன்னார் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கட்சிகளின் ஒன்றிணைவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மன்னார் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மன்னாரில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபையின் உறுப்பினருமான எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் கட்சிகளின் ஒன்றினைவு தொடர்பாகவும், கூட்டாக மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சகல விதமான நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்னெடுக்கப்படும் சகல போராட்டங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பாகவும் பேசப்பட்டது.

எதிர் வரும் தேர்தல்களின் போது கட்சி தனியாக அல்லது கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பாக ஆராயப்பட்டதோடு, கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அழைத்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது. (ப-56)

## செயலரின் அறிவிப்பு கண்துடைப்பு நாடகம்!

கொழும்பு, மார்ச் 2

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பானது, ஜெனிவாவுக்காக அரங்கேற்றப்படும் கண் துடைப்பு நாடகம் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்காக குரல் கொடுக்கும் சமூக செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி விரைவில் சந்திக்கவுள்ளார் எனவும், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினையை முடிவு க்குக் கொண்டு வரும் வகையிலும், அவர்களின் குடும்பத்தினருக்கு தீர்வை வழங்குவதற்காகவும் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார் என 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. இந்தநிலையில் ஜனாதிபதியிடமிருந்து சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா, அவ்வாறு விடுக்கப்பட்டால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்பார்களா? என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அருட்தந்தை இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாத் தொடரில் அழுத்தங்கள் குவிகின்றமையாலும், வெளிநாடுகளை சமாளிப்பதற்காகவுமே இப்படியான அறிவிப்பை விடுத்து கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். ஜனாதிபதி அழைத்தார் என்பதற்காக எம்மால் பேச்சுக்கு செல்ல முடியாது.

படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதனை முதலில் அரசு ஏற்க வேண்டும், அவர்கள் எங்கே என்ற வினாவுக்கும் விடை வேண்டும். இவற்றுக்கு சாதகமான சமிக்ஞை வெளியிடப்பட்டால் மாத்திரமே சந்திப்புக்கு செல்வது பயனுடையதாக இருக்கும்." - என்றார். (த-44)

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச்.2

யாழ் அரியாலைப் பகுதியில் முன்னெடுக்கபட்ட சுற்றிவளைப்பில் ஹெரோய்னுடன் 38 வயதுடைய இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று நள்ளிரவு இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன் போது 3ஆயிரத்து 320மில்லிகிராம்ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையின் பின்னர் சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுத்தப்படவுள்ளார். (வ-26)

## இலங்கை வந்தடைந்தன 25 இந்திய விமானங்கள்



கிளிநொச்சி, மார்ச் 2

இந்திய விமானப்படையின் 25 விமானங்கள் இலங்கையை வந்தடைந்தன. இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷன பதிரனவின் தலைமையில் நடைபெறவுள்ளது. அத்துடன், நாளை முதல் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை காலி முகத்திடலில் விமானக் கண்காட்சியொன்றும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே இந்திய விமானப்படை விமானங்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன. (ற-இ)

## 13 க்கு சமாதி கட்டியே தீரவேண்டும்!

### மாகாண தேர்தலுக்கு தேசிய அமைப்புகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 2

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தேசிய அமைப்புகள் உறுதியாக இருக்கின்றன. மேலும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்கமாட்டோம் - என்று தேசிய ஒருங்க மைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக் கத்தின் தலைவருமான கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகி வருகிறது என வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

மாகாணசபை முறைமையால் நாட்டுக்கு பாதிப்புகளே அதிகம் ஏற்பட்டுள்ளன. அது இலங்கை மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும். எனவேதான் 13 ஐ நீக்குமாறும், புதிய அரசமைப்பு ஊடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றோம். தேசிய அமைப்புகளின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும். இந்தியாவை திருப்திப்படுத்துவத ற்காக மாகாண சபைகளுக்கான தேர்தலைஅரசுநடத்தக்கூடாது. மாகாண சபைகள் இன்றி நாடு சிறப்பாகச் செயற் படுகின்றது. எனவே, அவற்றுக்கு புத்துயிர் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்கக் கூடாது. அதற்கு நாம் இடமும் அளிக்க மாட்டோம். - என்றார். (கு-44)




**மேடம்:** பணியில் இருந்த மந்த நிலை மாறும். கோபம் குறையும். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமாக நல்ல பெயர் எடுப் பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**இடபம்:** பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றல் கிடைக்கக்கூடும். உடன் பணிபுரிபவர்களுடன் சுமுகமாக பழகி மகிழ்வீர்கள். உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** இத்தனை நாள்களை விட அதிக வழிபாடு செய்வீர்கள். சிக்கலைத் தவிர்க்க சுலப வழி கண்டறிவீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கடகம்:** அடைக்க வேண்டிய கடன் உங்களை அவசரப்படுத்தி முடிக்க வைக்கும். மற்றவர் சிரமத்தைப் புரிந்து கொண்டு கருணை காட்டுவீர்கள். விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம்:** அக்கம் பக்கத்தினரிடம் சுமுகமாக நடந்து கொண்டு வசீ கரிப்பீர்கள். முயற்சியின் பேரில் குடும்பத்தில் பொருளாதார சிர மங்கள் தீரும். அலைச்சல் இருக்கும்.

**கன்னி:** விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கும். அதிகாரம் செய்வீர்கள். நின்றுபோன பணியைத் ஆரம்பிப்பீர்கள். பணியில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான நிலை மாறும்.

**துலாம்:** பல நாள்களுக்குப் பிறகு சுய தேவையை நிறைவு செய்து கொள்வீர்கள். தொழில், பணியில் உள்ள ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** குழந்தைகளின் ஆசையை நிறைவேற்றி மகிழ்விப்பீர்கள். மற்றவர்களைப் பார்த்துப் புதிய விஷயங்களைக் கற்பீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும். வீட்டை விரிவாக்குவீர்கள்.

**தனுசு:** உங்களின் புதிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள். குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிச்சுமை குறை யும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**மகரம்:** உழைப்பை அதிகரிப்பீர்கள். உடல்நலம் மேம்படும். மற்றவர் சொல்லும் விமர்சனம் பற்றிக் கவலை வேண்டாம். பிரியமான வர்களிடம் நேற்று இருந்த சச்சரவுகள் நீங்கும்.

**கும்பம்:** வாழ்வின் சுக சௌகர்யங்களை அதிகரித்துக் கொள்வீர்கள். மனம் சந்தோஷம் அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும். சிக்கல் ஏற்படுத்தும்படியான விவாதங்கள் வேண்டாம்.

**மீனம்:** முன்பு செய்த குற்றங்கள் தலைதூக்க வாய்ப்புள்ளது. உங்களை மற்றவர்கள் புதிர்போல் பார்ப்பார்கள். பகை நீங்கும். பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும்.

## போதைப்பொருள் கடத்தல் தம்பதிக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,மார்ச்.2

சொகுசுக் காரில் போதைப்பொருள் விநியோகம் மற்றும் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தம்பதி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த 31 வயதான கணவனிடமிருந்து 160 மில்லி கிராம் மற்றும் 27 வயதான மனைவியிடமி ருந்து 140 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டனர். (க-இ)

## சிறை அதிகாரியிடம் சிக்கிய அலைபேசிகள்

நீர்கொழும்பு சிறைச்சாலையில், சிறைச்சாலை காவல் அதிகாரியின், பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து ஐந்து கையடக்கத் தொலைபேசிகள் மீட்டுள் ளன என்று சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் சந்தன ஏகநாயக்க தெரி வித்தார். அத்துடன் சிறைச்சாலை காவல் அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# நல்லிணக்கத்துக்கு புதிய அரசமைப்பு!

### பேராசிரியர் திஸ்ஸ பரிந்துரை

கொழும்பு,மார்ச்.2

**அனைத்துக் காரணிகளையும் அரசியல் கோணத் தில் நோக்கினால் முரண்பாடுகள் மாத்திரமே தோன்றும். இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக் கத்தை உறுதிப்படுத்த புதிய அரசமைப்பில் சிறந்த பொறிமுறை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதா ரன தெரிவித்தார்.**

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

முஸ்லிம் சமூகத்தினரின் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது கட்டாயமாகும். பல் வேறு போராட்டங்களின் பின் னர், முஸ்லிம் மக்களுக்கு நீதி கிடைத்துள்ளது. தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அரசு காலம் கடந்தாவது அனுமதி வழங்கி யுள்ளமை வரவேற்கத்தக்கது.

ஒரு தரப்பினரது தவறான அபிப் ராயங்கள், அனைத்துப் பிரச்சி னைக்கும் மூல காரணியாகக் காணப்பட்டது. பல்லினச் சமூ கம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

தேசிய நல்லிணக்கம் கட்டியெ ழுப்பப்பட்டால் மாத்திரமே நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடையும்.

அரசியல் காரணிகளால் முரண் பாட்டுக் குட்பட்டுள்ள தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெ ழுப்ப அரசு உரிய நடவடிக்கை களை புதிய அரசமைப்பின் ஊடாக முன்னெடுக்க வேண் டும் என்று ஆலோசனை வழங்கி யுள்ளேன் - என்றார். (க-இ)




## கொரோனாப் போராளிகளுக்காக அனுதினமும் செபிப்போம்


இன்று நாம் தனிமைப்படுத்தல், முடக்கப்பிர தேசம், சமூக இடைவெளி, கை கழுவுதல், முகக் கவசம் போன்ற புதிய சொற் பயன்பாடு களுடன் அன்றாடம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம். இவையனைத்தும் தொடர்புகளைத் துண்டித்தல் என்னும் பொருள் பொதிந்தவை யாகக் காணப்படுகின்றன. இவை கொரோனா நோயின் வருகையால் எமது வாழ்வில் நுளைந்த சொற்களாயினும், கைவிடப்படுதல் நிலையைக் குறிப்பதல்ல.

கொரோனாத் தொற்றுக்கு எதிராக மிகப்பெரும் போராட்டத்தை மேற்கொண்டிருக்கும் எம் அன் புக்குரியவர்களுக்காக இறைவனிடம் இரைஞ் சும் பெரும் பொறுப்பும் தார்மீகக் கடமையும் எமக்கு உண்டு.

விசேடமாக, கொரோனாத் தாக்கத்தால் பீடிக் கப்பட்டோர், தனிமைப்படுத்தப்பட்டோர், மருத் துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர் கள், சமூக சேவைத்தொண்டர்கள், தனிமைப் படுத்தல் நிலையை பணியாளர்கள், பாதுகாப்புத் துறையினர் அனைவருக்காகவும் இறைவனி டம் வேண்டுவோம்.

மருத்துவர்க்கெல்லாம் மருத்துவரான இறை வன் இவர்களுக்கு உடல், உள பலத்தைக் கொடுத்து மனிதப் பேரழிவை நீக்கப் பணியாற் றச் செபிப்போம். தனிமைப்படுத்தல் கைவிடப் பட்ட நிலையல்ல. கைதூக்கிவிடும் இறையரு ளின் செயல் என்பதை உணர்த்துவோம்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை



# தமிழ்க் கட்சிகள் அடுத்த வாரம் கூடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

**தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசி யல் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்த் தேசியப் பேரவையை உரு வாக்கும் முயற்சி, ஒரு வாரத்துக் குப் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**


தமிழ்த் தேசியக் கட்சியின் செயலா ளர் எம்.கே.சிவாஜிலிங்கம் இத னைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை கூடின. கட்சிகள் ஐக்கியம் அவசியம் என் பதில் உறுதியாக இருந்ததோடு, அதில் கொள்கை அளவிலும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

ஒவ்வொரு கட்சிகளும் தமது கட்சி யின் உயர்மட்டக் குழுக்களைக் கூட்டி அது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு கால அவகாசம் தேவையாக உள்ளது என கூட்டத் தில் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இதில் பங்கேற்பதற்கு கொள்கை அளவில் இணங்கியுள்ள கட்சிகள் அனைத்தும் தமது கட்சியின் சார் பில் உத்தியோக பூர்வ மான பேச்சுக் களை முன்னெடுத்து, இறுதித் தீர் மானங்களை அறிவிக்க வேண் டும். கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இடையே இணக்கப் பாடு எட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்ப டையில் தமிழ்த் தேசியப் பேரவை தொடர்பில் இறுதி தீர்மானங்களை எடுக்கும் கலந்துரையாடலை ஒரு வாரத்தின் பின்னர் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார். (க-இ)

# பொதுபல சேனாவை தடைசெய்ய முடியாது

## ஞானசார தேரர் இறுமாப்பு



**கொழும்பு,மார்ச் 2**

**பொதுபல சேனா அமைப்பை எவராலும் தடை செய்ய முடியாது. இப்போது நாம் இருக்கும் நிலையை விடவும், பலமாக அடுத்த அடி எடுத்து வைப்போம் என்று பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.**

பொதுபல சேனா அமைப்பு அடிப்படைவாத அமைப்பு. அதனைத் தடைசெய்ய வேண்டும் என்று ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட நாம் காரணம் அல்ல. இஸ்லாமிய அமைப்புகளுடன் நாம் இணைந்து செயற்படவும் இல்லை. நாம் அடிப்படைவாதிகள் அல்ல. நாம் கௌதம புத்தரின் கொள்கைக்கு அமைய செயற்பட்டு வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் எம்மை அடிப்படைவாதிகள் என்று கூற முடியாது.

நாம் பயங்கரவாதிகளும் அல்ல. எமது மக்கள் இலக்குவைக்கப்பட்டு வருகின்றனர். நாம் எமது மக்களை காப்பாற்றவே பேசுகின்றோம். அதற்காகவே கோபப்படுகின்றோம். அதற்காக எம்மை அடிப்படைவாதிகளென கூறி அடிப்படைவாதிகளுடன் எம்மையும் ஒப்பிட்டு கூறுவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்த தேர்தலை இலக்கு வைத்து தாம் ஆட்சிக்கு வரலாம் என்று நினைக்கும் அரசில் உள்ள சிலரே இந்தச் சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றனர். விரைவில் அவர் குறித்தும் அவருடன் உள்ள நபர்கள் குறித்தும் உண்மைகளை வெளிப்படுத்துவோம்- என்றார். (க-இ)

## சீரான வானிலை நிலவும்

கொழும்பு, மார்ச்.2

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வட கிழக்குமுதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என வளிமண்டலத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (வ-இ)

## விமானப்படையில் 7,290 பேருக்கு பதவியுயர்வு

கொழும்பு,மார்ச் 2

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, விமானப் படையில் 467 அதிகாரிகள் உள்ளிட்ட 7 ஆயிரத்து 290 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை விமானப்படை 70 ஆவது ஆண்டுநிறைவை இன்று கொண்டாடவுள்ளது.

கட்டுநாயக்க உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து விமானப் படை முகாம்களிலும் பல் வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (க-இ)

## ஒலி மாசு முறைப்பாடு குறித்து விசேட கவனம்!

கொழும்பு, மார்ச் 2

சாதாரண தரப் பரீட்சை நடைபெறுகின்ற பரீட்சை நிலையங்களை அண்மித்துள்ள பகுதிகளில் ஒலி மாசு தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வேளையில் பொலிஸார், கல்வி மற்றும் சுகாதாரப் பிரிவுகளுடன் நெருக்கமாக செயல்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஹ-இ)



## ரூ.1000 கோரி போராட்டம்

ஹற்றன்,மார்ச் 2

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் அடிப்படை சம்பளமான ஆயிரம் ரூபா வழங்க வேண்டும், காணி உரிமை மற்றும் வீட்டு உரிமை ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று கோரி கொஸ்லந்தை நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில், மக்கள் எதிர்ப்பு வாசகங்கள் பொறித்த பதாதைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (க-இ)

# ஐ.தே.க. பிளவுபட ஹக்கீமே காரணம்

## கட்சியின் பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 2


ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டதற்கும், சஜித் பிரேமதாச கட்சியிலிருந்து வெளியேறியதற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தான் காரணம்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதி களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ரவூப் ஹக்கீம் ஒவ்வொரு விடயத்தையும் கூறி சஜித் பிரேமதாஸவை ஐ.தே.கவிலிருந்து பிளவுபடுத்தினர். கட்சிப் பிரிவின், பின்னரான காலத்தில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தான் இவற்றுக்கெல்லாம் பொறுப்பு கூற வேண்டும்- என்றார். (ஐ-இ)



திருகோணமலையில் உள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-40)

# மோ.சைக்கிள் திருட்டு அதிகரித்து வருகிறது

## அவதானம் தேவை என பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

கல்னேவ - நேகம பகுதியில் கொள்ளையிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உதிரிபாகங்களை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

அண்மை காலமாக மோட்டார் சைக்கிள் கொள்ளைகள் அதிகரித்து வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் மாத்திரம் ஆறு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

திட்டமிட்டமுறையில் மோட்டார் சைக்கிள்களை கொள்ளையிடும் நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையுடன், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இவர்கள் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



அமரபுர மஹா நிகாயவின் சூலகண்டி பீட சங்க சபை தலைமையக கட்டடத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று முன்தினம் பிற்பகல் வெலிதர புஷ்பாராம விகாரையில் அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் போது பிரதமருக்கு நினைவு பரிசொன்று வழங்கப்பட்டது. (ச-இ)

# பேஸ்புக்கில் பண மோசடி வர்த்தகர்கள் மூவர் கைது

கொழும்பு,மார்ச் 2

முகநூல் ஊடாக ஏமாற்றி பணம் கொள்ளையடிக்கும் கும்பலுடன் தொடர்புடைய, பிரபல வர்த்தகர்கள் மூவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு கிடைத்துள்ளது என்று கூறி இளைஞர்களை ஏமாற்றி, பேஸ்புக் ஊடாக பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் டவுனில் சொகுசு வீட்டு தொகுதியின் 10 ஆவது மாடியில் உள்ள வீட்டில் 85 லட்சம் ரூபா பணத்துடன், குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இங்குச் சம்பவத்தின் பிரதான 9 சந்தேக நபர்கள் கடந்த 23 ஆம் திகதி கல்கிஸ்ஸைப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



# 75 மாணவர்களுக்கு மாமரக் கன்றுகள்!

கிளிநொச்சி, மார்ச்.2
கற்பகா திட்டத்தின் 39 ஆவது கட்டமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவில் 75 மாணவர்களுக்கு தலா 250 ரூபா பெறுமதியான மாமரக் கன்றுகள் நேற்று வழங்கப்பட்டன.
லண்டன் கிளி மக்கள் அமைப்பின் ஒரு மில்லியன் பயன் தரு மரக்கன்றுகள் நடும் கற்பகா திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவில் கல்வி கற்கும் 75 மாணவர்களுக்கு மாமரக் கன்றுகள் அதிபர் அ.கலாநேசன் தலைமையில் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் திருக்கோயில் உதவிப் பிரதேச செயலாளர் க.சதிசேகரன், முன்பள்ளி கல்விப் பணியக உத்தியோகத்தர் பா.மோகனதாஸ், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தகளான க.கணேசன், க.தயாபரன், அம்மன் மகளிர் இல்ல முகாமையாளர் ம.குமுதினி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-222)



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதன்மை மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அதிபர். வ. நந்தீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பெற்றோர், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-63)

### யாழில்

# நவீன வசதிகளுடன் வாகனத் தரிப்பிடம்

**யாழ்ப்பாணம், மார்ச் 2**
**யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து யாழ். நகரில் நவீன முறையிலான பொது வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைக்கவுள்ளன.**

யாழ்.நகர் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சங்கத்துக்குச் சொந்தமான சுமார் ஒரு ஏக்கர் காணியில் இந்தத் வாகன தரிப்பிடம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.
இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் மேற்கொண்ட உடன்படிக்கை குறித்து ஆராயும் முகமாக சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி கூட்டப்பட்டது.
இந்த உடன்படிக்கையை பொதுச்சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதன் காரணமாக, மேற்படி திட்டம் செயல்வடிம் பெறுகின்றது என்று கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.
இந்தத் திட்டம் ஊடாக இந்தச் சங்கம் பொருளாதார அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் அதேநேரம், யாழ். நகரத்துக்கான பொது வாகனத் தரிப்பிட வசதிக்கான நீண்ட நாள் குறைபாடும் நீங்கிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
நகர அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.நகரத்துக்கான ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் இந்த பொது வாகனத் தரிப்பிடம் அமையவுள்ளது. (ற-17)

# நிறுத்தல் கருவி கையளிப்பு

காங்கேசன்துறை, மார்ச் 2
தெல்லிப்பழை தையிட்டி கணேசன் வித்தியாலயத்துக்கு மின்சாரத்தில் இயங்கும் நிறுத்தல் அளவைக் கருவி ஒன்று நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.
இராஜேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் லயன் கலாநிதி செல்லத்துரை திருமாறனின் அனுசரணையில், காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் கலாநிதி கா பீ ஜெயவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபரிடம் கருவி கையளிக்கப்பட்டது. (ஐ-9)



# மாணவர்கள் கௌரவிப்பு

யா/ தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, வித்தியாலய மண்டபத்தில் வகுப்பாசிரியர் ச.புவீந்திரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வுக்கு இங்கிலாந்து இரத்தினம் அறக்கட்டளை நிறுவனத்தினரும், கனடா சித்தன்கேணி ஒன்றியத்தினரும் நிதிப்பங்களிப்பு வழங்கியிருந்தனர். (ய-27)

# கொழும்பில் தமிழ் பெண்ணுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல்

### பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, மார்ச்,2
கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றும் ஒருவர், அந்த நிறுவனத்தின் தமிழ்ப் பெண் செயலாளர் மீது பாலியல் ரீதியாக துன்புறுத்தலை மேற்கொண்டுள்ளார் என்று பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
அத்தோடு சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி இலங்கை பெண்கள் மற்றும் சிறுவர்கள் பணியகத்திலும் பாதிக்கப்பட்ட பெண் முறைப்பாடு செய்துள்ளார்.
பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியது மட்டுமல்லாது, தமிழர்களைக் கொச்சைப் படுத்தும் வகையிலான வார்த்தைப் பிரயோகங்களை குறித்த நிறைவேற்று அதிகாரி பயன்படுத்தி செயலாளரைத் திட்டியுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.
சம்பவம் குறித்து பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டாலும், சம்பந்தப்பட்ட பிரதான நிறைவேற்று அதிகாரி இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)

### அடிப்படை வசதிகள் கோரி

# 21ஆவது நாளாகத் தொடரும் சத்தியாக்கிரகப் போராட்டம்



வவுனியா.மார்ச்.2
வவுனியா, பூந்தோட்டம் ஸ்ரீநகர் கிராம மக்களால், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று 21ஆவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.
20 வருடங்களாகியும் தமக்கு காணி, உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்துதரப்படவில்லை, மைதானம் இன்மை, வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அந்த மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.
இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;
பலவருடங்கள் ஆகியும் எமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.
இது தொடர்பாக ஜனாதிபயால் தெரிவு செய்யப்பட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் மற்றும் அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இந்த விடயத்தில் எவரும் கரிசனை கொள்ளவில்லை. போராட்டத்தை முன்னெடுத்து 21நாள்கள் கடக்கின்ற நிலையில் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் எங்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறியவில்லை. எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் வவுனியா



தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராசிங்கம் ஆகியோர் மாத்திரமே வருகை தந்து எமது பிரச்சினைகளை கேட்டறிந்துள்ளனர். இருப்பினும் இதுவரை சாதகமான பதில்கள் வழங்கப்படவில்லை -என்றனர். (ப-110)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 2
யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் வாராந்தம் நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
ஆலய சண்முக விலாச மண்டபத்தில் மாலை 5.15 மணிக்கு சைவப்புலவர் பொன் சந்திரவேல் "ஆற்றுப்படை தந்த நக்கீரர் " என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்



### திருமதி வலத்தீஸ் திரேசம்மா

வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வலத்தீஸ் திரேசம்மா நேற்று (01.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதர் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வலத்தீஸ் அவர்களின் அன்பு மனைவியும், லூர்துநாயகம், மேரிராணி, டேவிற் அன்ரனி (சுவிஸ்), மரியம்மா, மேரிசிசிலியா (ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), கிறிஸ்ரீனம்மா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி ஜோசப்பின், செபமாலை, ஜெயந்தி (சுவிஸ்), இராசசேகரம், கிறிஸ்ரி ஞானராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், மைக்கல் சாள்ஸ், றஜிந்தன், சாம்சன், நிதர்சன், யஸ்மின், லக்சனா, டிலக்சன், லூட்ஜனா (லண்டன்), லூட்சாளினி, லூட்நிறோஜி, லூட்றொய்சியா, ஜீவிக்கா, றொகான், றோய், றொசாந், ஜெறோன் (சுவிஸ்), டியோனிஸ் (சுவிஸ்), ஆதீனா (சுவிஸ்), பிரகாஷ் (பிரான்ஸ்), ஜெகாஷ் (பிரான்ஸ்), சிறீனா (பிரான்ஸ்), தோமஸ் லக்கி (லண்டன்), மேரிநிறோஜினி, றோஜர்ஸ், தர்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மெரினோ, ஷெகான், ஏஞ்சல், ஆயன், ஆறோன், டிலூசியா, நிசிக்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கச்சாய் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அல்லாரை புனித செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வெள்ளாம் போக்கட்டி,**
**கொடிகாமம்.**

**தகவல்:**
**வ.லூர்துநாயகம் (மகன்)**
**077 724 5029**

## மரண அறிவித்தல்

பிறப்பு · 04 · 12 · 1954



இறப்பு · 01 · 03 · 2021

### திருமதி ஆறுமுகம் தவமலர்

நாகர்கோவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் நீர்வேலி மத்தியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஆறுமுகம் தவமலர் நேற்று (01.03.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சிவக்கொழுந்து ஆகியோரின் மகளும், சிற்றம்பலம் செல்லாச்சி ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும், ரஞ்சிதமலர் (கோப்பாய்), பாலசுந்தரம் (லண்டன்), சிவஞான சுந்தரம் (லண்டன்), சண்முகநாதன் (லண்டன்), விஜயகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுபாஜினி, காலஞ்சென்ற சுபாஸ்கரன், அருளானந்தம் (லண்டன்), கவிதா, சிவறமணன் (கனடா), சுரேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன், சந்திரிகா (லண்டன்), ஆரணன், சிவகௌரி (கனடா), ஜெயராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராம்சங்கர், சங்கவி, சகிதா, வேணுகானன், ஜனுசன், சட்ஷயன் (லண்டன்), ஆதீஷ், நிதுஷா, ஆருசன், வருண், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொலைபேசி இல.:**
**075 042 0472 (மகள்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வாழ்வக சாதனையில் மற்றுமொரு நீட்சி!

## பட்டம்பெற்ற மாணவர்கள் தொடர்பில் அதன் தலைவர் ஆ.ரவீந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்ட மளிப்பு விழாவில் வாழ்வக மாணவர்கள் இருவர் பட்டம் பெற்றுள்ள நிலையில், இந்தச் சாதனை வாழ்வகத்தின் சாதனைப்பட்டியலில் பெரும் நீட்சி என்று வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தெரிவித்தார். வாழ்வகத்தின் மாணவர்களான ச.கட்சனி, வி.விஜய லாதன் ஆகிய இருவரும் பட்டம் பெற்றிருந்தனர். இதை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த மாணவர்களின் இந்த நிமிர்வானது வாழ்வகத்தின் அயராத முயற்சிக்குக் கிடைத்த அரும் பரிசு என்பதில் ஐயமில்லை என்றும், .மேலும் 10 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்று வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)


## கேள்வி பத்திரம் கோரல்

ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (சந்தைக்கு அருகில்) அமைந்துள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்மன் ஆலயத்தில் கட்டட வேலைகள் தொடங்க உள்ளதால் அதற்கான கேள்விப் பத்திரங்கள் எமது ஆலயத்தில் இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமையில் இருந்து 10.03.2021 புதன்கிழமை வரை பெற்றுக்கொள்ள முடியும், அனைத்து கேள்விப் பத்திரங்களும் 11ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

**077 1900 547**
**077 9588 457**
**077 3911 914**

## மரண அறிவித்தல்

தோற்றம் · 24 · 09 · 1938



மறைவு · 01 · 03 · 2021

### வேலர் பிள்ளையார் சிவகடாட்சம் (பழனி)

வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலர் பிள்ளையார் சிவகடாட்சம் (பழனி) நேற்று (01.03.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் (வேலணை நீர் விநியோக சபை) காலஞ்சென்ற ஞானதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வேலர் பிள்ளையார் தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பூரணம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான வர்ணம்மா, மகேஸ்வரி மற்றும் மங்கையற்கரசி, அன்னமலர் (பனை அபிவிருத்திச் சபை) வே.பி.சண்முகநாதன் (ஜே.பி, ஓய்வுபெற்ற கமநல சேவை நிலைய பிரதம இலிகிதர், நல்லூர் மஸ்தியஸ்தர் சபை உறுப்பினர்) ஆகியோரின் சகோதரனும், சியாமளா, சிவடேந்திரன் (விலங்கியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்), சிவச்செந்தூரன் (ஆசிரியர், ஷஹிரா கல்லூரி, திருகோணமலை) சிவகணேசன் (கணிய அளவையியலாளர் Q.S) சிவதர்மனா (ஆசிரியர், கிளி/ சோரன்பற்று கணேசா வித்தியாசாலை) சிவபதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கனகரெத்தினம், சரவணமுத்து, ஞானசேகரம் மற்றும் தேவகுலநாயகம் (J.P), கந்தசாமி, சிவலோகனாதன் (நூலகம், யாழ் பல்கலைக் கழகம்) யேசு மாக்கிறேற், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் பாணுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோட்ஷவாணி (நூலகம், வேலணை பிரதேச சபை) நாகேந்தினி, நசேந்தினி (யாழ் போதனா வைத்தியசாலை) தசேந்திரன் (யாழ் கமநல சேவைத் திணைக்களம்) துஸ்யந்தன், தேவநந்தினி, சுகிந்திரராஜ் (பிரான்ஸ்), மேகலானந்தி, அகுலப்பிரியன் (சென் ஜோன்ஸ் கல்லூரி) மோகன்ராஜ், அம்பிகாபதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதம செயலாளர் செயலக கொத்தணி) சுதர்சினி (இலிகிதர், மின்சார சபை, சுன்னாகம்), சுபத்திரா (பிரதி விவசாய பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், திருகோணமலை), தாரினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சிவகங்கா, லம்போதினி, வேணு, தஸ்மின், சிவகவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: சி.சிவச்செந்தூரன்**
**077 200 3701, 077 9167 230**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

# யாழில் அரசியல் உரையரங்கு!

சமகால அரசியல் உரையரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் மரபியலாளர் ஜீ.ஜெயதீஸ் தலைமையில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த உரையரங்கு இடம்பெற்றது. மரபுரிமை அரசியல் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் கலாநிதி பரமு புஸ்பரட்ணமும், வனவள அரசியல் எனும் தலைப்பில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனும், ஜெனிவா அரசியல் எனும் தலைப்பில் அரசியல் கருத்தியலாளர் நிலாந்தனும் மற்றும் சிறப்புரையை யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரும் நிகழ்த்தினர். (ற-20)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17.03.1953 | 01.03.2021 |



### திருமதி நவரத்தினம் கோணேஸ்வரி

கந்தரோடையை பிறப்பிடமாகவும் கோவிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பு கைதடியை (வேலன்பிராய்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் கோணேஸ்வரி நேற்று (01.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சிதம்பரம் தம்பதியரின் மகளும், சோமசுந்தரம் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், நவரத்தினத்தின் அன்பு மனைவியும், மயூரன், செந்தூரன், லக்ஸ்மணன் நந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சயிந்தா, சிவனேஸ்வரி, சிவலோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜஸ்மிதன், சிவாஜினி, சினோஜன் (பிரான்ஸ்), சிவேதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற கோணேஸ்வரனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 188 9498,
077 616 2329.

தகவல் :
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஓராண்டு நினைவஞ்சலி

| பூவுலகில் | இறையுலகில் |
|---|---|
| 05.05.1950 | 13.03.2020 |



### அமரர் தாமோதரம்பிள்ளை பாலகிருஸ்ணன்

ஓராண்டு கழிந்தது அப்பா எங்களை விட்டுச்சென்று
ஒரு யுகத்தை கடந்த வலி நீங்கள் இல்லாத ஓராண்டு
ஒற்றைப் புதல்வியாக இருந்து
மணவாழ்வில் மகாராஜவாய் வாழ்ந்தீர்கள்

பிள்ளையை பண்பாய் பக்குவமாய் வளர்த்து
பார்போற்ற வாழ்ந்தீர்கள்
பாசத்தை கொட்டி கொடுத்துவிட்டு
பாதியில் எங்களை தவிக்கவிட்டு சென்றது ஏனப்பா!

நீங்கள் இல்லா ஒவ்வொரு நொடியும்
ரணமாகவே கழியும் அப்பா

உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்னாரின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 02.03.2021 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 11.00 மணியளவில் "திவ்வியமஹால்" மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


34, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
0776176505, 021 2229096

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27.09.1934 | 01.03.2021 |

### அமரர் பி.தங்கமுத்து



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் Dr.சத்தியமூர்த்தி அவர்களின் தந்தையார் பி.தங்கமுத்து நேற்று (01.03.2021) திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலமான செய்தியை அறிந்து மிகுந்த மனவருத்தம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல

பிரிவால் துயருறும்
பணிப்பாளர் (பதில்),
பிரதிப் பணிப்பாளர்கள்,
வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,
தாதிய உத்தியோகத்தர்கள்
மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள்.

## மணிவிழா வாழ்த்துக்கள்




கல்வியும் மதிப்பும்
இரு கண்களெனக் கொண்டு
கற்றோராய் சென்ற இடமெல்லாம்
சிறப்பு பெறும் கல்வி அழகே
அழகு என்பதை பறை சாற்றி
நிற்கும் தனக்கென ஒருகொள்கை
வகுத்து விடாமுயற்சியுடன்
செயலாற்றும் உதவிக்கும்
சமூக முன்னேற்றத்திற்கும்
முன்னிற்கும்
Best Wishes
மணிவிழா நாயகன்

### திரு.ஆறுமுகம் குமரேசமூர்த்தி

சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துக்கள்!

வாழ்த்துவோர்: நலன்விரும்பிகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### பாலசிங்கம் ஸ்ரீபாதன்

(மண்டைதீவு)

ஆண்டுகள் இரண்டாகிப் போனதோ
நின்முகம் கண்டு
ஆனாலும் - எம் மனம் ஆறவில்லை
அன்பாய் உங்கள் ஒரு புன்முறுவல்
காண்போமா மறுமுறை
நீர் மறைந்த இன் நன் நாளில்
நீங்காத நினைவுகளோடு
உமக்காய் காத்திருக்கிறோம்.

தோற்றம் 10.07.1964
மறைவு 23.02.2019

மனைவி, பிள்ளைகள்,
197, பொற்பதி வீதி.
கோண்டாவில்.

# ஊழியர் பணிநீக்கப்பட்டால் இழப்பீடாக 25 லட்சம் ரூபா

## தனியார் நிறுவனங்களுக்கு ஆப்பு

**கொழும்பு, மார்ச் 2**

**தனியார் நிறுவனங்களில், உரிய காலத்துக்கு முன்னர் ஊழியர்கள் பணியில் இருந்து நீக்கப்பட்டால், 25 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.**

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தியால் கடந்த மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தனியார் பிரிவில், அரச கூட்டுத்தாபனங்களில், சபைகள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு இந்த இழப்பீடு வழங்கப்படும்.

வர்த்தமானி வெளியிட்ட நாள் முதல் இந்த நடைமுறை செல்லுபடியாகும். கொவிட்-19 தொற்றுக் காரணமாக கடந்த காலங்களில் உரிமையாளர்களால் ஊழியர்கள் பலர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக குறித்த ஊழியர்கள் இந்த வர்த்தமானிக்கமைவான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரை செலுத்த வேண்டிய 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் இந்தத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது. சரியாக 15 வருடங்களின் பின்னர் இந்தத் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது என்று பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார். (க-இ)

# நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி,மார்ச். 2


இளம் தொழில் முனைவோருக்கான ஒரு லட்சம் காணித் துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான நேர்முகத் தேர்வு கரைச்சி பிரதேச செயலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கட்டம் கட்டமாக நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 40 பேருக்கு நேற்றுமுன்தினம் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. (ஐ-113)

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்கள் அகவை 60 அடைந்தமையினால் ஓய்வுபெறுவது குறித்து வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். தனது பணியினை ஆசிரியராக. அதிபராக. வளவாளராக. கோட்டக்கல்விப் பணிப்பாளராக பல்வேறுபட்ட வகையில் சேவை ஆற்றி கல்விச் சமூகத்தில் தனக்கென ஒரு பெயரினைப் பெற்றுள்ளார். காரைநகர் கோட்டத்தின் பணிப்பாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் வேளை ஓய்வு பெறுகின்றார். இவரது சேவையினால் காரைநகர் பிரதேசம் அடைந்த நன்மைகள் பல. இவரது பணியினால் கல்வியில் மேம்பாடு ஏற்பட்டமை யாவரும் அறிந்த ஒன்று. இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைவதுடன் மேலும் இவரது பணி சிறந்து விளங்குவதுடன் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**பொ.ரவிச்சந்திரன்**
(வலயக் கல்விப் பணிப்பாளர்
தீவக கல்வி வலயம்)




### அதிபர் நலன்புரிச் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இன்று மணிவிழா காணும் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.குமரேசமூர்த்தி அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். இவர் சிறந்த ஆளுமைப் பண்புமிக்க கல்வியாளன் ஆவார். காரைநகர் கல்விக் கோட்டத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். எமது கோட்ட அதிபர்கள். ஆசிரியர்களுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கியதோடு அவர்களது வளர்ச்சிக்கும் வாண்மைத்துவவிருத்திக்கும் உறுதுணையாக இருந்து செயற்பட்டவர் இவரது ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.தி.மதிவதனன்**
(அதிபர்- யா/ யாழ்ரன் கல்லூரி,
தலைவர், காரைநகர் கோட்ட அதிபர் நலன்புரிச் சங்கம்)

Congratulations! Congratulations!

இன்று அகவை அறுபதில் கால்பதிக்கும்

## திரு. ஆறுமுகம் குமரேசமூர்த்தி

(கோட்டக்கல்விப் பணிப்பாளர் காரைநகர், தேசிய கல்வி நிறுவன வளவாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, தேசிய கல்வி நிறுவன வளவாளராக பணியாற்றி இன்று 35 வருடகால சேவையின் பின் ஓய்வுபெறுகின்றார்.

BA, MA, MPhil. Q MEd, MPhil, Sp. Sc, Trd, SLPS 1, PG.Dip.in. Ed (Merit), PG. Dip.in.Ed.Mgt (Merit),
ALIC (Sinhala), ALIC (English), Dip.in TL (Sinhala - Tamil) HDip. in TL (Sinhala - Tamil - English)

பிறந்த இடம்: வாரிவளவு காரைநகர்

வ விபரம்:

சிரியர் பணி - 05.08.1985 - 26.12.1998 வரை ◆ அதிபர் பணி - 27.12.1998 - 17.01.2016 வரை

ாட்டக்கல்விப் பணிப்பாளராக - 18.01.2016 - 01.03.2021

மணிவிழா நாயகனின் ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாக அமைவதுடன் நீடூழிகாலம் வாழவும்
எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வர பெருமான் சௌந்தராம்பிகையை இறைஞ்சுகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர்கள், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்

**கோட்டக்கல்வி அலுவலகம், காரைநகர்.**

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications from suitably qualified **persons for the following posts:**

1. **ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION)**

   **Qualifications:**

   An Attorney-at-Law with A Degree in Law/ Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualification.

   **OR**

   An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualification.

   **Salary Scale :** U-EX 1(II)- Rs. 50,625-3X1,125-54,000 (EB) 55,335;12X1,335-71,355/- p.m.

   **Selection** : By Structured Interview

2. **CURATOR (LANDSCAPE)- GRADE III**

   **Qualifications:**

   Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science / Horticulture / Floriculture / Forestry from a recognized University / HEI with not less than one (01) year of experience in landscaping in a State / Corporation or reputed private sector organization in supervisory capacity.

   **OR**

   Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Landscape Architecture from a recognized University/HEI with not less than one (01) year of experience in Landscaping in a State/ Corporation or reputed private sector organization in supervisory capacity.

   **OR**

   Should possess a four year Special Bachelor's Degree [Honours] in Botany of a recognized University/HEI with not less than two(02) years of experience in landscaping in State/Corporation or reputed private sector organization in supervisory capacity.

   **Salary Scale :** U-EX 1(II) - Rs. 50,625-3X1,125-54,000 (EB) 55,335; 12X1,335-71,355/- p.m.

   **Selection** : By Structured Interview

3. **CHIEF SECURITY OFFICER- GRADE II**

   **Qualifications:**

   An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an Officer of equivalent rank in the other Armed Services.

   **OR**

   A Person who possesses a degree from a recognized University/Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

   **OR**

   A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

   **Salary Scale :** U-EX 1(II)- Rs. 50,625-3X1,125-54,000(EB)55,335; 12X1,335-71,355/- p.m.

   **Selection** : By Structured Interview

4. **PROJECT MANAGER – CONSTRUCTION WORKS**

   **Qualifications**

   (a) Should posses a B.Sc Engineering degree from a recognized University/HEI specializing in Civil Engineering

   **or**

   Should posses a B.Sc Engineering degree from a recognized University/HEI specializing in Quantity Surveying

   **or**

   Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka (IESL)

   **AND**

   (b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.

   **or**

   Posses a corporate membership from a recognized Institute of Quantity Surveying

   **AND**

   (c) A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well as managing direct labour.

   **Salary Scale :** U-EX2(II)- Rs.66,180-8X1,335;8X1,630-89,900/-p.m.

   **Selection** : By Structured Interview.

5. **CHIEF MARSHAL**

   **Qualifications :**

   1. A holder of the post of Deputy Chief Marshal in the Marshal service in the University system and confirmed in that post with not less than five (05) years of satisfactory service in that grade.

   **Physique** –
   Height - 5' 5"
   Chest - 32" deflated

   **Note** : Preference will be given to those with actively participated in sports activities, social welfare activities and recreation programmes within the University and at national level.

   **OR**

   2. An Officer not below the rank of Lieutenant Colonel in Sri Lanka Armed Forces/equivalent rank in Sri Lanka Police with active participation in sports activities.

   **Salary Scale**: U-EX 2(II) - Rs.66,180-8X1,335;8X1,630-89,900/-p.m.

   **Selection**: By Structured Interview


**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified form** issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number**: **970000090000387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**


PEOPLE'S BANK — Deposit Slip — Office Copy
Account Number: 9 7 0 0 0 0 0 9 0 0 0 0 3 8 7
Date
Name of Account Holder: University of Jaffna
Give the following information only when a deposit of over Rs. 250,000/- is made by a person other than the Account Holder
Name: Your Full Name
Address: Your Address — Tel. No: Your Tel. No
NIC/PP/D.L. No: Your NIC No
Purpose — Cash Depositor's Signature: Your Signature
Notes: x 5000, x 2000, x 1000, x 500, x 200, x 100, x 50, x 20, x 10, Coins, Total
Valid if Overprinted or Signed by an Officer
Do Not Write Anything Below This Line
Checked by


**All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post which you are applied for on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of **the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna** on or before **26.03.2021.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
**University of Jaffna.**
**01.03.2021.**

## 31ம் நாள் வீட்டுக்கிருத்தியை அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில் 09 . 06 . 1937

இறைவன் திருவடியில் 31 . 01 . 2021

### அமரர் இரத்தினசாமி ஆனந்தராசா

(அ.இ.ப.ச. நிதிச் சங்க முகாமையாளர்)

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வட்டு தென் மேற்கு மூன்றாம்பனை வயிரவர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இ.ஆனந்தராசா அவர்களின் அமரத்துவச் செய்தியினைக் கேள்வியுற்று நேரில் வருகை தந்து ஆறுதலளித்த நல்லுள்ளங்களுக்கும், உலகின் பல பாகங்களிலிருந்தும் தொலைபேசி மூலமும் கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் தெய்வத்தின் பசுமையான நினைவலைகளுடன் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

02.03.2021 இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியையிலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மூன்றாம்பனை வயிரவர் கோவிலடி,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

# நடுகை இதழ் வெளியீடு

கிளிநொச்சி, மார்ச் 2

நடுகை இதழ் வெளியீடு நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கவிஞர் தீபச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, கவிதை, கட்டுரை மற்றும் சிறுகதை போன்ற பல படைப்பாளிகளின் ஆக்கங்கள் உள்ளடக்கிய தொகுப்பான நடுகை இதழின் வெளியீட்டுரையை துணுக்காய் கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகரான யோகேஸ்வரனும், நூலின் அறிமுக உரையை கவிஞர் சிந்துதாசனும் நிகழ்த்தினார்கள். சத்தியானந்தனின் கவிதை ஆற்றுகை நிகழ்வும் நடைபெற்றது. (ய-12)

## வேலையாட்கள் தேவை

ஐஸ்கிறீம் விற்பனைசெய்வதற்கு விற்பனையாளர் தேவை. (தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத் தக்கது)

**077 3696714**

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் உள்ள கட்டட நிர்மாண ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணி வெற்றிடங்கள் உள்ளன.

- Technical Officer
- Store Keeper
- Driver

**077 558 8835, 076 200 4827**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண நகரப்பகுதியில் வீடொன்றில் பணிபுரிய 25 - 55 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. 05.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **070 728 3616**

## போதைப்பொருளுடன் இருவர் கைது

வவுனியா, மார்ச் 2

வவுனியாவில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 16 வயது மதிக்கத்தக்க இளைஞன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா மடுக்கந்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில், வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 16 வயது மதிக்கத்தக்க இளைஞனிடமிருந்து 3 கிலோ 85 கிராம் கஞ்சாவும், கைது செய்யப்பட்ட 61 வயது மதிக்கத்தக்க முதியவரிடம் இருந்து 1 கிலோ 890 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான இருவரும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தகவல் தொடர்பாடல் கிளையில் தகவல் தொழில்நுட்ப உதவியாளராகக் கடமையாற்றும் **செல்வி ஜெ.ஜெயரதி** அவர்களின் பாசமிகு தந்தையார்

### திரு.வைரமுத்து ஜெயச்சந்திரா

அவர்கள் கடந்த (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்**
**மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.**

# மீள் கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

## கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2021

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சங்கானை சந்தை உட்புறக் கடைத்தொகுதி இல.- 13 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |
| 02 | சங்கானை சந்தை உட்புறக் கடைத்தொகுதி இல. - 23 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |
| 03 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத்தொகுதி இல. - 01 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 04 | சங்கானை சந்தை மேல்மாடிக் கடைத்தொகுதி இல. - 03 | 675,000.00 | 13,500.00 | 1000.00 |
| 05 | சுழிபுரம் சத்தியகாட்டு சந்தை கடை இல. - 01 | 402,000.00 | 8,040.00 | 1000.00 |
| 06 | சுழிபுரம் சத்தியகாட்டு சந்தை கடை இல. - 02 | 402,000.00 | 8.040.00 | 1000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2021.03.02 - 2021.03.09 மதியம் 12.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2021.03.10 பி.ப 02.00 மணிவரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2021.03.10 பி.ப 02.30 மணி

மேலதிக விபரங்களை 08.01.2021 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் பார்வையிடலாம். அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் தலைமை அலுவலகத்திலும் விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

த.நடனேந்திரன்,
தவிசாளர்,
உள்ளூர் அதிகார பெருகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
02.03.2021

## சகல வாடிக்கையாளர்கட்கும் பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.03.2021ம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 100.00 ரூபாவாக அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பால், பால் உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலை அதிகரித்துள்ளது என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 19 . 07 . 1959



மறைவு 02 . 02 . 2021

கடந்த 02.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தியாகராசா கிருபாகரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 03.03.2021 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அரவது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்துநடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குளப்பிட்டி வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

## படைகளைப்....

இவ்வாறு அமைச்சரும், சட்டத்துறை நிபுணருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கை பக்கச்சார்பானது என நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். அதை ஏற்றுக்கொண்டு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சிற்சில திருத்தங்களை முன்வைத்துள்ளது. ஆனால் அதையும் நாம் ஏற்கத் தயாரில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை அடிப்படையற்றது, நீதியை நிலைநாட்டும் நோக்கில் தயாரிக்கப்பட்டது அல்ல. மாறாக இலங்கையின் உள்விவகாரங்களில் நேரடியாகக் கைவைக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் கதைக்கப்படுகின்றது. போர்க் குற்றவாளிகள் வெளிநாடுகளில் உள்ளனர். 12 மற்றும் 14 வயதுடைய பிள்ளைகளைக் கடத்திச் சென்று, அவர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளை தொங்கவிட்டது யார்?. இவை தொடர்பான புகைப்படங்களும் உள்ளன. சர்வதேச சட்டதிட்டங்களுக்கு இது முரணானது. அவர்கள் தஞ்சமடைந்துள்ள நாடுகளின் சட்டத்துக்கும் முரணானது. இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருக்கும் சில நாடுகளே இலங்கை மீது குற்றச்சாட்டு களை அடுக்கி, எமது படையினரைக் குறிவைக்கின்றன.

அமெரிக்காவில் உள்ள முப்படையினருக்கு எதிராக சர்வதேச விசாரணையோ அல்லது வெளிநாடொன்றோ விசாரணை நடத்தமுடியாது. அதற்கு ஏற்றவகையில் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்படி அமெரிக்க அரசோ, நீதிமன்றமோ அல்லது அங்குள்ளவர்களோ நேரடியாகவோ மறைமுகமாகவோ விசாரணைக்கு ஒத்துழைப்பது தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படுகின்றது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அதிகாரிகள் எமது நாட்டுக்குள் வருவார்களானால் சிறைபிடிக்கப்படுவார்கள் என அமெரிக்கத் தூதுவராக இருந்த ஜோன் பொல்டன் என்பவர் ஐ.நா.வில் தெளிவாக இடித்துரைத்தார். பிரிட்டனிலும் படையினருக்கு சட்டரீதியாக பாதுகாப்பளிக்கும் சட்டம் அமுலில் உள்ளது.

எமது நாட்டிலுள்ள படையினரை இலக்கு வைப்பதற்கு, வேட்டையாடுவதற்கு எவராவது முயற்சிப்பார்களானால் அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். சட்டரீதியான பாதுகாப்பை வழங்குவோம். தற்போதுள்ள சட்டம் அதற்குபோதுமானதாக இல்லையெனில் புதிய சட்டங்களை இயற்றுவதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது. படையினருக்கு எதிரான போலிக் குற்றச்சாட்டுகளுக்கு முடிவுகட்ட வேண்டியுள்ளது' - என்றார். (ம-44)

## குளவி....

துள்ளார். இந்தச் சம்பவம் முள்ளியவளை, முறிப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. முள்ளியவளையைச் சேர்ந்த கந்தசாமி சத்தியநாதன் (வயது-51) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முறிப்பில் உள்ள விவசாய நிலத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது இவரைக் குளவி கொட்டியுள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி அன்றைய தினமே உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (எ-19)

## இடறி....

ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த இ.விஜயரத்தினம் (வயது-54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அலுமினிய பொருத்து வேலைக்காக வந்திருந்த இவர், நெல் பதப்படுத்தும் தொட்டியின் பொருத்து வேலைகளை முடித்துக்கொண்டு கீழே இறங்கியபோது இடறி விழுந்துள்ளார். அவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-113)

## கொவிட்...

வல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 476 ஆக அதிகரித்துள்ளது.

கனேமுல்லவைச் சேர்ந்த 73 வயதான பெண் ஒருவரும், கொழும்பு 10 ஐச் சேர்ந்த 75 வயதான ஆண் ஒருவரும், புலத்கொஹூபிடியவைச் சேர்ந்த 83 வயது ஆண் ஒருவரும், கண்டியைச் சேர்ந்த 61 வயதுடைய ஆண் ஒருவரும், பூஜாபிடியவைச் சேர்ந்த 75 வயதுப் பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். (எ-இ)

## நீதி கோரி....

யாழ்ப்பாணத்தில் கிட்டுப் பூங்காவுக்கு முன்பாகவும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கிட்டுப் பூங்காவுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்புப் பேரணி, நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் வரை சென்று நிறைவடைந்தது.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளிவந்துள்ள பலவீனமான முன்வரைவு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி வேண்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று அதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றினூடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் இதய சுத்தியுடன் செயற்பட்டு இலங்கை அரசு மீதான காத்திரமான நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டம், கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக ஆரம்பித்து கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகம் வரை சென்றது. (ம)

## அடிப்படைக்...

அவசர கடிதம் ஒன்றையும் நேற்று அந்த அமையம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு

கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் சமூக அமையம் உட்படப் பொது அமைப்புக்கள் இணைந்து விடுத்த கோரிக்கையானது, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இனப்படுகொலை உட்பட அனைத்துக் குற்றங்கள் தொடர்பில் விசாரணை ஒன்றுக்காக பாரப்படுத்துவதற்கான முனைப்புக்களை எடுத்தல் தொடர்பானது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நேரத்தை வீணடிக்கும் செயல். இந்தப் பிரேரணை தனித்துவமான பொறிமுறையை உருவாக்கத் தவறுகிறது. சிரியா மற்றும் மியான்மர் தொடர்பில் உருவாக்கப்பட்ட பொறிமுறை போன்றதொரு பொறிமுறை தானும் பிரேரணையில் உள்ளடக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரியா விவகாரத்தில் 14 தடைவைகள் சீனா மற்றும் ரஷ்யாவின் வீற்றோக்கள் மத்தியிலும் பிரேரணைகளை ஐ.நா. பாதுகாப்பு சபையில் முன்வைத்த மேற்குலக நாடுகள், இலங்கையைக் கொண்டு போவதற்குக்கூடத் தயங்குவது ஏன் என தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி எழுப்பியுள்ளது.

காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள உத்தேச பிரேரணையின் முகவுரைப் பந்தி ஒன்பது, 2017 க்குப் பின் காணிகள் விடுவிக்கப்படவில்லை என்பதையும் தமிழ் மக்களின் காணிகள் பல்வேறு காரணங்களுக்காகத் தொடர்ந்து அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விடயத்தையும் மூடி மறைக்கின்றது எனவும் தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் பிரேரணையின் பந்தி தொடர்பில், ஒருதலைப்பட்சமாக 13ஆம் திருத்தத்தை இல்லாமல் செய்யும் முயற்சியை நாம் கண்டிக்கும் அதேவேளை, 13ஆம் திருத்தம் அரசியல் தீர்வுக்கான ஓர் ஆரம்பப் புள்ளி தானும் இல்லை. சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் தாம் தமக்கு உகந்த தீர்வை தேர்வு செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் தொடந்து இடம்பெற்று வரும் மீறல்கள் தொடர்பில் ஐ. நா. விசேட அறிக்கையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் பிரசன்னம் வடக்கு கிழக்கில் அவசியம் எனவும் பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியன அவை உருவாக்கப்பட்ட போதே வழுக்கள் நிறைந்த பொறிமுறைகளாகவே இருந்தவை என்றும் அவற்றை முற்றாக தற்போதைய இலங்கை அரசாங்கம் முடக்கியுள்ள சூழலில் அவை பலப்படுத்தப்பட வேண்டும் என உத்தேச பிரேரணை கோருவது முரண் நகையானது என்றும் உள்ளது. (எ-இ)

## வடக்கில்....

ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 6 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர், விடுவிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டிருந்த பருத்தித்துறையைச்சேர்ந்த மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மல்லாவியில் கொரோனாத் தொற்றாளர் கலந்து கொண்ட இறப்பு வீடொன்றுக்குச் சென்றதையடுத்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவருக்கே நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று 244 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் 10 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாந்தை மேற்கைச் சேர்ந்த நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் ஏற்கனவே 20க்கும் மேற்பட்டவர்கள் தொற்றுடன் இனங்காணப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு சென்று வந்த பேரனுக்கும், பேர்த்திக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கே நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அச்சுவேலி சந்தையில் தொற்றுடன் இனங்காணப்பட்ட ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து சிகிச்சைக்கு வந்த இவருக்கு, மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் வைத்து சிகிச்சையளிக்கப்படும் நிலையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-26)

## கூரிய...

சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் நிலாவரை புத்தூர் இராசபாதை வீதியில் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். நிலாவரையைச் சேர்ந்த சின்னத்தம்பி ஶ்ரீனிவாசன் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையே மின்மோட்டர் போடுவதில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி, தந்தையைக் கூரிய ஆயுதங்களால் தாக்கி மகன் கொலை செய்தார் என்று கூறப்படுகின்றது.

இவர் 4 வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டிலிருந்து வந்தவர் எனவும், மனநலம் குன்றியவர் எனவும் தெரியவருகிறது. சந்தேகநபரை அச்சுவேலி பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-20,10,319,26)

## சர்வதேச...

ரணை மூலம் தண்டனை அளிக்கப்படுவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையானது முழுமையானது கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை உரிமைகோர இன்று எவரும் முன்வராத நிலைமையே காணப்படுகிறது என்று ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க நேற்று நடந்த ஊடக சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

© 2000 Agfa-Gevaert N.V.

# இந்த வருடம் மாகாணத் தேர்தல்: இன்று ஆராய்கிறார் ஜனாதிபதி!

**கொழும்பு, மார்ச் 2**

**மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்த முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.**

மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டு ஜூன் மாதமளவில் நடத்தப்படலாம் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்த நிலையில், அரசு இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று அறிவித்திருந்தது. எனினும், உத்தியோகப்பூர்வமற்ற பேச்சுக்கள் அரசுக்குள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில், தேர்தலை ஜூன் மாதத்தில் அல்லது இந்த வருடம் நிறைவடைவதற்குள் நடத்த முடியுமா?. அதற்கான சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஏதேனும் சிரமங்கள் உள்ளதா? என்பது குறித்து ஆராயும் விதமாகவே இன்று பிற்பகல் ஜனாதிபதியுடன் சுகாதாரத் தரப்பினர் கலந்துரையாடவுள்ளனர்.

அதேபோல் நாட்டின் சகல மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்தையும் ஒன்றாக நடத்த முடியுமா? என்பது தொடர்பில் சட்ட வல்லுநர்களிடம் இந்தக் கலந்துரையாடலின்போது ஜனாதிபதி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அமைச்சர்கள், செயலாளர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (எ-22)

## மாணவியின் கோரிக்கைக்கு உடனடித் தீர்வு

மதவாச்சிப் பகுதி பாடசாலை மாணவியொருவர் பாடசாலை விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு உடனடியாகத் தீர்வு கிடைத்துள்ளது.

கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் கிவுலேகடவல வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சித் திட்டத்தின் போதே இந்த மாணவி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதி விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் பணியை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார். மாணவியின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு இரண்டு மணி நேரத்துக்குள் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தது. (ற-இ)

# சம்பியனானது பிரோன்கோஸ்

**யாழ்ப்பாணம், மார்ச் 2**

**ஞானம்ஸ் பெயின்ட் நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் நல்லூர் பிரோன்கோஸ் அணி கிண்ணம் வென்றது.**




யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நல்லூர் பிரோன்கோஸ் அணியை எதிர்த்து ஜப்னா றோயல்ஸ் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நல்லூர் பிரோன்கோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 112 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பிரியலக்சன் 33 ஓட்டங்களையும், டார்வின் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜப்னா றோயல்ஸ் அணி சார்பாக அதிகபட்சமாக ஜிந்துசன் மற்றும் பிரசன்னா இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜப்னா றோயல்ஸ் அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். அந்த அணி சார்பாக அதிகபட்சமாக அருண்குமார் 36 ஓட்டங்களையும், பிரசன்னா 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நல்லூர் பிரோன்கோஸ் அணி சார்பாக அதிகபட்சமாக குகசதுஸ் மற்றும் சஜீபராஜ் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். இதையடுத்து 16 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பிரோன்கோஸ். ஆட்டநாயகனாக பிரோன்கோஸ் அணியின் டார்வின் தெரிவுசெய்யப்பட்டார். (ம-320)

## தந்தையின் வழியில் தனயனும் களத்தில்

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இளைய மகனான ரோஹித ராஜபக்ச, தனது அரசியல் செயற்பாடுகளை, தனது தந்தை தேர்தலில் போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்திலும் ரோஹித ராஜபக்ச குருநாகல் மாவட்டத்தில் தந்தைக்காகப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

குருநாகல் கிரிபாவ கிராமத்துக்குப் பயணித்த அவர், அங்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை கள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

கிராமத்தில் செருப்புத் தயாரிக்கும் பெண்களின் கைத்தொழில் தொடர்பிலும் அவதானித்துள்ளார். மஹிந்த ராஜபக்சவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ச ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் சென்றுள்ளதால், மஹிந்த குருநாகல் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தார். இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச பிரதமர் அலுவலகப் பிரதானியாக செயற்படுகிறார். (க-இ)

**காணி விற்பனைக்கு**
புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டில் 5பரப்பு 6 குளி வயற்காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.
**077 676 4914**

**காணி தேவை**
மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இடத்தில் 20 தொடக்கம் 30 வரையானபரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை
தொடர்புக்கு 076 221 2037

**வேலையாள்கள் தேவை**
யாழ்நகரின் அண்மித்த பகுதியில் உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
- சமையலறை வேலையாள்
- உணவுபரிமாறுபவர்

**077 906 3036**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம் மெயின் றோட்டுடன் இருபத்திரண்டு பரப்பு காணி (22) விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம். தரகர் தேவையில்லை.
தொடர்புக்கு : குரு 077 288 0152
077 468 3354
076 857 7043

**காணி விற்பனைக்கு**
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) (2பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்) பருத்தித்துறை வீதியில் இருந்து 40m நடைதூரம். (தரகர் தேவையில்லை)
**077 596 3845, 076 640 0974**

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
அலுவலக சிற்றூழியர்
பிளம்பர்
வெல்டர்
எலக்ட்ரிசியன்
**ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.**
**அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**
- வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- தேவையேற்படின் தங்குமிட வசதி, உணவு என்பனவும் வழங்கப்படும்.

இன்று (02.03.2021) நாளை (03.03.2021) ஆகிய திகதிகளில் காலை 9 மணியிலிருந்து பி.ப 6 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில், 392/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கைலாச பிள்ளையார் கோயில் அருகில்) என்ற முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.